பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 16 வியாழக்கிழமை (01.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :279

## இலங்கையில் அரசுடன் பேச புலிகள் திட்டவட்டமாக மறுப்பு

கொழும்பு, செப்.1

போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசு - புலிகள் இருதரப்பினர் இடையேயும் நடைபெற உள்ள உத்தேச பேச்சுகளை இலங்கையில் நடத்துவதற்கு புலிகள் மறுத்துவிட்டனர்.

- இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸியான 'அஸோஸியேட் பிரஸ்'. இது தொடர்பாக அதன் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த நிறுத்த ஒப்பந்தம் குறித்து நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில்தான் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதை அரசு நிராகரித்திருந்தது. வெளி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் இன்று தமிழ்த்தேசிய எழுச்சி

கிளிநொச்சி,செப்.1

தமிழரின் இறைமையையும் சுதந்திரப் போராட்டத்தையும் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரி, மாபெரும் தமிழர் உரிமைப் பிரகடன மாநாடு இன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிமுதல் கிளிநொச்சி பொது மைதானத்தில் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கின் ஏனைய பகுதிகளில் இருந்தும் தென்னிலங்கையில் இருந்தும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர். இன்றைய மாநாட்டிற்கென பல்லாயிரக்கணக்கானோர் கிளிநொச்சியில் திரள்வர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளவர்களுக்குரிய போக்குவரத்து உட்பட சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன. வாக

(14 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தை வலுப்படுத்தும் பேச்சும் இப்போதைக்கு இல்லை!

## இனி எல்லாமே தேர்தலுக்குப் பின்பே

கொழும்பு, செப்ரெம்பர்1

**யுத்த நிறுத்தத்தை வலுப்படுத்தும் விடயங்கள் குறித்து அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் முன்னிலையில் நேரடியாகப் பேசுவதற்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளபோதிலும் அந்தப் பேச்சுகள் இப்போதைக்கு நடைபெறும் சாத்தியம் அறவே இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.**

**இனி எல்லாமே வருட இறுதியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர்தான் என்றும் அவை அடித்துக் கூறுகின்றன.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட பின்னணியில் ஏற்பட்ட பதற்றத்துக்கு மத்தியில், ஏற்கனவே நடைமுறையில் நலிவடைந்து கேள்விக்கு உள்ளான நிலையில் இருந்த யுத்த நிறுத்தம் முறிந்துபோகக்கூடிய ஏதுநிலை நிலவியதும் - அதையடுத்து அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினர் இலங்கை அரசுடனும், விடுதலைப் புலிகளுடனும் அவசரஅவசரமாகத் தொடர்புகொண்டு எடுத்த முன்முயற்சிகளை அடுத்து யுத்த நிறுத்தத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான நேரடிப் பேச்சுகளில் ஈடுபட இரு தரப்பினரும் இணங்கினர் என்பதும் - தெரிந்தவையே.

இதனையடுத்து இந்தப் பேச்சுகள் இயன்ற விரைவில் நடைபெறும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்தப் பேச்சுகள் இப்போதைக்கு நடைபெறுவதற்கான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் இரு வாரத்தில் நீக்கும்?

கொழும்பு, செப்.1

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டம் இன்னும் இரு வார காலத்தில் நீக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தினால் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதியுடன் காலாவதியாகிறது.

இதனை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்க வேண்டுமானால் அதற்கு மீண்டும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். ஆனால், எதிர்வரும் 20ஆம் திகதியே நாடாளுமன்ற அமர்வுகள் இனி ஆரம்பமாகவுள்ளன. அதற்கான வாய்ப்பில்லையெனத் தெரிகிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர்-ஜே.வி.பி. நேற்றும் சந்திப்பு!

கொழும்பு, செப்.1

'எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தருவது குறித்து ஜே.வி.பியின் உயர் மட்டக் குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இரண்டாவது தடவையாகவும் உத்தியோக பூர்வமாகச் சந்தித்து நேற்றுப் பேச்சு நடத்தினர்.

இந்த விடயம் குறித்து நேற்று முன்தினம் இரு தரப்பினரும் பேச்சு நடத்தியிருந்தனர். ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கவென ஜே.வி.பியினர் விதித்துள்ள நிபந்தனைகளில் பலவற்றை ஏற்கனவே பிரதமர் ஏற்றுள்ளார் என்று நம்பகரமான செய்திகள் தெரிவித்துள்ளன. இந்த நிலையில் நேற்று இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கா தாக்குதலை நடத்திய புலி வீரர்களுள் ஒருவர் வன்னி மீண்டார்!

### 'போரும் சமாதானமும்' தமிழ் நூலில் பாலசிங்கம் தகவல்

கொழும்பு, செப்.1

2001ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி கட்டுநாயக்கா விமானத் தளத்தைத் தாக்கி அழித்த புலிகளின் 15 பேர் கொண்ட தாக்குதல் அணியில் ஒருவர் உயிருடன் தப்பி வன்னி திரும்பினார்.


இதனைப் புலிகள் ஆவண ரீதியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதி, அடுத்துவரும் நாள்களில் வெளியாகவிருக்கும் - விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு அடங்கிய - 'போரும் சமாதானமும்' என்ற தமிழ் நூலில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆங்கிலத்தில் இந்நூலை ஏற்கனவே வெளியிட்டிருக்கும் மதியுரைஞர் பாலசிங்கம் மேலும், புதியபுதிய தகவல்களையும் சரித்திரச் சம்பவங்களையும் சேர்த்து, அதனைத் தமிழாக்கி, புதிய நூலைப் படைத்திருக்கின்றார்.

இந்த நூல் புதுமையான அரசியல் வர

(14 ஆம் பக்கம் பார்க்க)




## தேர்தலில் யாருக்கு ஆதரவு? இ.தொ.காவுக்குள் முரண்பாடு

கொழும்பு, செப்.1

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவை வழங்குவது என்பது தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் உச்சக்கட்ட முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க இ.தொ.கா. தலைமை உத்தேசித்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்த யோசனைக்கு கட்சியின் உயர்மட்ட உறுப்பினர் பலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அணியில் ஜே.வி.பியினரும் இருப்பதால் சிறுபான்மை மக்களின் நியாயமான அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வை அங்கு எதிர்பார்க்க முடியாதென இ.தொ.காவின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சித் தலைமையிடம் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளனர். தலைமை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸ கொலை வழக்கில் 21 சந்தேக நபர்கள் விடுதலை

கொழும்பு,செப்.1

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 21 சந்தேகநபர்களை கொழும்பு மேலதிக நீதிவான் எல்.லியனாராச்சி நேற்று விடுதலை செய்தார்.

12வருடங்களுக்குப் பின்னர் இந்த வழக்கின் 21 சந்தேகநபர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தபோதும், 8 சந்தேகநபர்களே நேற்று மன்றில் ஆஜராகினர்.

இந்த 21 சந்தேகநபர்களுக்கெதிராகவும் போதுமான ஆதாரங்கள் இல்லையெனச் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்திருப்பதால், இவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியாதிருப்பதாக இரகசியப் பொலீஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்தனர்.

(எ-க)

## 'சுடர் ஒளி' மீதான தாக்குதலுக்கு சர்வதேச அமைப்பு கண்டனம்

கொழும்பு, செப்.1

'சுடர் ஒளி' பத்திரிகைத் தலைமை அலுவலகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கிறது பத்திரிகையாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம்.

தாக்குதல் தொடர்பாக இலங்கை அரசாங்கம் முழுமையான விசாரணைகளை நடத்தி, ஊடகவியலாளர்கள் இம்சிக்கப்படும் கலாசாரத்திற்கு உடனடி முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று பத்திரிகையாளர்களுக்கான சர்வதேச சம்மேளனம் தனது (14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க படையினர் - சமாசப் பிரதிநிதிகள் சந்திப்பர்

## கடல் கண்காணிப்பு அதிகாரி உறுதிமொழி

வடமராட்சி,செப்.1

வடமராட்சி வடக்குக் கடலில் இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு இராணுவத்தளபதி, கடற்படைத்தளபதி ஆகியோரைச் சந்தித்து அவர்களுக்கும், கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகளுக்கும் இடையே சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடல் கண்காணிப்புப் பிரதிநிதி லாஸ்பாய்மான் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதி அளித்தார்.

கடந்த சில வாரங்களாக வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்களின் ஊடுருவல், அதனால் உள்ளூர் மீனவர்களுக்கு ஏற்பட்டுவரும் தொழில்,உடைமைகள் இழப்புத் தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசம் ஏற்கனவே இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார்செய்திருந்தது.

இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள கண்காணிப்புக்குழுவின் கடல் கண்காண்காணிப்பாளர் லாஸ்பாய்மான் நேற்று பருத்தித்துறைக்கு விஜயம்செய்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் டொன்பொஸ்கோ, செயலாளர் க.சூரியகுமாரன் ஆகியோருடன் உரையாடினார்.

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் ஆறு மாதகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கடற்றொழிலை ஆரம்பித்த போது இந்திய மீனவர்கள் தொல்லை கொடுத்து வருவதால் எமது மீனவர்கள் இழப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். கடந்த செவ்வாயன்றும் 300 இற்கும் மேற்பட்ட இந்திய இழுவைப்படகுகள் வடமராட்சி வடக்குக் கடலில் தங்கிநின்று தொழிலில் ஈடுபடுவதால் எமது கடற்றொழிலாளர்கள் தொழில் செய்யமுடியாத நிலையில் திரும்பியுள்ளனர். இவ்வாறு கடற்றொழில் செய்யமுடியாத நிலை தொடருமானால் எமது கடற்றொழிலாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என சமாசப்பிரதிநிதிகள் எடுத்துக்கூறினார்கள். இதனையடுத்து கடல்கண்காணிப்பாளர் பதிலளிக்கையில் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளை தானும் நேரில் பார்த்ததாகவும் இதுதொடர்பாக கடற்படை, இராணுவத் தளபதிகளைச் சந்தித்து உரையாடி, தளபதிகளுக்கும் சமாசப்பிரதிநிதிகளுக்குமிடையே சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தி இந்தியப் படகுகளின் ஊடுருவலைத் தடுக்க முயற்சிகளை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.

(எ-173)

# சாதாரண தரப் பரீட்சை டிசெ. 12 முதல் ஆரம்பம்

கொழும்பு,செப்.1

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 22ஆம் திகதிவரை நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இப் பரீட்சையைக் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் நடத்துவதெனவோ அல்லது பிற்போடுவதெனவோ எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லையெனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-205)

# கலாசாலைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,செப்.1

ஆசிரிய கலாசாலையின் 2004-2005 ஆம் வருடத்திற்கான இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

முதலாம் வருட இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளிலும் இரண்டாம் வருட இறுதிப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையும் நடைபெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(9-202)

# சூனியப் பகுதி குறுகியதாகவிருப்பதால் அடிக்கடி சம்பவங்கள் நடக்கின்றன

## நாகர்கோயில் நிலைமை பற்றி கண்காணிப்புக்குழு எச்சரிக்கை

கொழும்பு,செப்.1

அரச கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளையும் தமிழீழவிடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளையும் பிரிக்கும் நாகர்கோயில் சூனியப் பகுதியில் அடிக்கடி போர்நிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதைக் கவனிக்கையில் அப்பகுதியில் பாரதூரமான சம்பவங்கள் வெடிக்கக்கூடிய சாத்தியமிருப்பதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். அப்பகுதியில் இருதரப்புகளிடையிலான தூரம் (இடைவெளி) ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறுகியதாகவே காணப்படுகின்றது. அதனால் சின்னவொரு ஆத்திரமூட்டும் சம்பவமும் பெருமெடுப்பில் வெடித்துவிடும் அபாயமிருக்கிறது.

இப்பிரதேசத்தில் அடிக்கடி விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்குமிடையில் போர்நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுவந்துள்ளன. இருதரப்புகளுக்கிடையிலுள்ள இடைவெளி மிகக்குறுகியதாகவிருப்பதே இதற்குக் காரணம்.

இந்தப் பிரச்சினைக்கு இருதரப்பினரும் ஒருதீர்வைக்கண்டுபிடித்தாகவேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்தில் நிலைமைமோசமாகலாம் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எச்சரித்துள்ளது.

(ப)

## நீதிமன்றத்தை அவமதித்த வழக்கு

# தென்னிந்தியத் திருச்சபை குருவுக்கு பிடியாணை

யாழ்ப்பாணம்,செப்.1

தென்னிந்தியத் திருச்சபையின் மட்டக்களப்புப் பிராந்திய குருவான வண எஸ். ஜெயநேசனுக்கு யாழ். நீதிமன்றம் மீண்டும் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு ஒன்றில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிரஸ்தாப குரு, நேற்று நீதிமன்றத்துக்குச் சமுகமளித்திருக்கவேண்டும். ஆனால், அவர் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கவில்லை. இதனையடுத்து யாழ். நீதிமன்றத்தால் அவருக்கு மீண்டும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயத்தின் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவதைத் தடைசெய்யுமாறு வழங்கப்பட்டிருந்த கட்டாளையை வழங்கச் சென்ற பிஸ்கால் ஊழியரை அவமானப்படுத்தி அவரைப் பணியைச் செய்யவிடாது தடுத்ததாக இவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ். நீதிமன்றில் நீதிபதி ஆர். ரி.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது இந்த வழக்கின் முதலாவது எதிரியான வணபிதா. பி. ஆர். நவீந்திர அனுகூலன் இரண்டாம் எதிரியான அ.ஜெயராஜன் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர். 3 ஆம் எதிரியான வணபிதா. எஸ்.ஜெயநேசன் நீதிமன்றில் ஆஜராகவில்லை. இதனையடுத்து இவருக்கு எதிராக நீதிவான் மீண்டும் பிடியாணை பிறப்பித்து எதிர்வரும் 21ஆம் திகதி அவரை நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறும் -

இந்த உத்தரவை மட்டக்களப்பு பிஸ்கால் ஊடாக நிறைவேற்றும்படியும்- உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜரான இரு எதிரிகளையும் 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்லுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-3-8)

## ஜனாதிபதித் தேர்தல் குறித்த

# ஜே.வி.பி. - மஹிந்த பேச்சில் முன்னேற்றம் என்கிறார் மங்கள

கொழும்பு, செப்.1

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு நடத்தப்பட்டுவரும் பேச்சுகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுத் தெரிவித்தார்.

"இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்" என்ற கொள்கையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்: அது குறித்த செய்தியாளர் மாநாடு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. அதிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"இலங்கையை வெற்றிபெறச் செய்வோம்" என்ற கொள்கையின் கீழ் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கும். ஜனாதிபதித் தேர்தலில் எமது கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தரப் பல கட்சிகள் முன்வந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள நடத்தப்பட்டுள்ள பேச்சுகள் நல்ல முன்னேற்றத்தைத் தந்திருப்பதுடன் தொடர்ந்தும் பேச்சுகள் நடைபெறவுள்ளன. அதேபோல்,, ஜாதிக ஹெல உறுமயவுடனும் நடந்த பேச்சுகளும் முன்னேற்றத்தைத் தந்துள்ளன.

ஏனைய கட்சிகளுடனும் பேச்சுகளை நடத்தி ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- இவ்வாறு மங்கள சமரவீர மேலும் கூறினார்.

(எ-க)

# கிரனேட் வைத்திருந்த 4 இளைஞர்கள் கைது

செங்கலடி, செப்.1

கிரனேட்டுக்களை வைத்திருந்தார்கள் என்று கூறப்படும் மூவர் உட்பட நான்கு இளைஞர்களை ஏறாவூர் பொலீஸார் கைதுசெய்துள்ளனர். அவர்களிடம் இருந்து மூன்று கிரனேட்டுக்களும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலீஸார் கூறினர்.

கடந்த திங்கட்கிழமை இரவு சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தகவல் ஒன்றினையடுத்து பதுங்கியிருந்த பொலீஸார் சந்தேகநபர்கள் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருக்கையில் கைதுசெய்துள்ளனர்.

முருகன் கோயில் வீதி, தளவாய் என்னுமிடத்தைச் சேர்ந்த காத்தமுத்து குமார், செங்கலடியைச் சேர்ந்த கருமன் குகன், சவுக்கடி கிராமத்தைச் சேர்ந்த தம்பிராசா விஜயபிரதாப் மற்றும் அதே பகுதியைச் சேந்த இராசலிங்கம் ரவீந்திரன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

# நல்லூர் ஆலயச் சூழலில் வாகனங்களை நிறுத்தாதீர்!

## சிறப்புச் செயலணி கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர் ஆலயத்தின் பெருந்திருவிழாவின் இறுதி மூன்று நாள்களிலும் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தமது வாகனங்களை ஆலயச் சூழலில் இருந்து விலத்தி நிறுத்தி உதவவேண்டும் என்று நல்லூர் உற்சவ கால சிறப்புச் செயலணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான சீ.வி.கே.சிவஞானம் கேட்டுள்ளார்.

நல்லூர் ஆலயத்தின் பெருந்திருவிழாக்களான இரதோற்சவம், தீர்த்தோற்சவம், பூங்காவனம் போன்ற முக்கிய திருவிழாக்களுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவான பக்தர்கள் வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக ஆலயச் சூழலில் போக்கு வரத்து நெரிசல் ஏற்படலாம்.

இதனைக் கருத்திற்கொண்டு நல்லூர் ஆலயத்திற்கு வாகனங்களில் வருகை தரும் பக்தர்கள் தூர இடங்களில் அவற்றை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

(9-7)

# மட்டக்களப்பில் நேற்றுமட்டும் 6 வெவ்வேறான தாக்குதல்கள்

## நான்கு இராணுவத்தினர், பொலீஸ் கான்ஸ்டபிள் காயம்

ஏறாவூர், செப்.1

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று புதன்கிழமை இராணுவம் மற்றும் பொலீஸார் மீது வெவ்வேறான ஆறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராணுவத்தினர் மீது 5 தாக்குதல் சம்பவங்களும், பொலீஸார் மீது ஒரு தாக்குதலும் இடம்பெற்றுள்ளன.

இச்சம்பவங்களில் நான்கு இராணுவத்தினரும், ஒரு பொலீஸ் உத்தியோகத்தரும் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்; பொலீஸ் ஜீப் ஒன்றும் பலத்த சேதத்திற்குள்ளாகி உள்ளது எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு இராணுவ முகாம் காவலரண்மீது நேற்றுக்காலை இடம்பெற்ற கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தின்போது இரண்டு இராணுவத்தினர் படுகாயம் அடைந்[illegible] நிலையில் அவர்கள் பொல[illegible] யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சாந்த (வயது - 30), ஹேரத் (வயது-32) ஆகிய இராணுவத்தினரே இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்துள்ளனர்.

வாழைச்சேனை - யூனியன் கொலனி மற்றும் பேத்தாழை ஆகிய பிரதேசங்களில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

வாழைச்சேனை பொலீஸ் பிரிவிற்குட்பட்ட காயன்கேணி இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது இரண்டு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலீஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை சுற்றுலா நீதிமன்றத்தில் இருந்து ஏறாவூர் நோக்கிவந்துகொண்டிருந்த [illegible] பொலீஸ் நிலையத்தைச் [illegible] அவசரபிரிவு ஜீப்மீது கிரான் பிரதேசத்தில் வைத்து கைக்குண்டு வீசப்பட்டுள்ளதுடன், துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். ஜீப் வண்டியும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

கிரான் கோரகல்லிமடு பிரதான வீதியில் வழமையான வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனம் தெரியாத நபர்கள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். எனினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இச்சம்பவங்களையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்கள் மத்தியில் பெரும் பீதியும் பதற்றமும் நிலவுகிறது.

நேற்றுமுன்தினம் வாகரைப் பகுதியில் பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார்; போராளி ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் 01
உறுதிகொண்ட
தமிழர்களின்
உணர்வுகளின்
சங்கமம்

# ஓங்கி ஒலிக்கட்டும் தமிழர் குரல் உரிமை இழந்து வாழோமென...

உலகத்
தலைவர்களே
எமது
உணர்வுகளை
அங்கீகரி




## இன்னொரு திருப்புமுனை

செப்ரெம்பர் முதல்நாள் கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றிலே முக்கியமான வரலாற்றுத் தடத்தைப் பதிக்கின்ற நாள். இம்மாவட்டத்திலே வாழ்கின்ற அனைத்து மக்களும் ஆண், பெண், இளைஞர்கள், யுவதிகள், வயோதிபர் என்ற வேறுபாடுகளைமறந்து மக்கள் சமுத்திரமாக அணி திரண்டு கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேசிய இன விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மிகப் பலமான நிலையில் நின்றுகொண்டு சர்வதேச சமூகத்திற்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார்கள். சர்வதேச சமூகமே தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை உணர்விற்கு மதிப்பளி! சர்வதேச சமூகமே தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி! என்று முழக்கமிடப் போகின்றார்கள். இப்பேரொலி சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சிக் கதவுகளைத் தட்டி உலுப்பப்போகிறது. அதன் தாக்கம் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்ட வரலாற்றிலே மேலுமொரு பரிமாணத்தை ஏற்படுத்தும். எனவே செப்ரெம்பர் முதல்நாள் ஒரு வரலாற்றுப் பதிவு.

*மா.சிவபாலன், தலைவர்,*
*தமிழ்த்தேசிய எழுச்சிப் பேரணி, கிளிநொச்சிப் பிரதேசம்.*

## விடுதலைக்காகத் திரள்வோம்!

சிறிலங்காவில் தமிழர்கள் ஆகிய எம் மீதான அடக்குமுறை பற்றிய செய்தி இன்று சர்வதேசமயப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் நாம் எமது மக்களின் உயிர் இழப் புக்களையும் துன்ப துயரங்களையும் போர் இழப்புக்களையும் இனியும் சுமக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். எமது தமிழர் தேசியம், தன்னாட்சி, உரிமை, மரபுவழித் தாயகம் என்பவற்றைச் சர்வதேச சமூகத்திற்கு வலியுறுத்தி கிளிநொச்சியில் நடைபெறப் போகும் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் ஜனநாயக வழியிலான மக்களின் உணர்வுகளின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தி அனைத்து மக்களும் கலந்துகொண்டு வவுனியாவில் நடந்த பேராளர் மாநாட்டின் பிரகடனத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் எமது எழுச்சிப் பிரகடனத்தை வெளியிட்டுச் சர்வதேசத்திற்குக் குரல் கொடுப்போம். அனைவரும் அணி திரண்டு வாரீர்.

*ப.நாகேந்திரம், செயலாளர்,*
*தேசிய எழுச்சிப் பேரவை - பரந்தன்.*

## வரலாற்றுப் பதிவாகும் நாள்

சூனியத்துக்குள் தள்ளிவிட்ட தமிழ் மக்களின் வரலாற்றுப் புரள்வை கிளிநொச்சி மாவட்ட மக்கள் அனைவருமே ஒன்றுதிரண்டு தூக்கி எறியும் நிகழ்வு இங்கு நடந்தேறப் போகிறது.

இந்த மக்கள் எழுச்சியும் எமது வரலாற்று நிகழ்வு போலவே முடிவுறுத்தப்படின் அது சுதந்திரத்தின் தூரத்தை மிகக் குறுகியதாக்கும்போது எங்களுக்கு அவர்கள் சொல்வதற்கும் செய்வதற்கும் எதுவும் இருக்காது. இந்தச் செய்தியே இந் நாளின் கருத்தும் காத்திரமும் ஆகும்.

*ஆ.கேதீஸ்வரன்*
*தலைவர், மாவட்ட கூட்டுறவுச் சபை,*
*கிளிநொச்சி*

## தமிழரது அபிலாசையை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்

அனைத்து உலக சமுதாயமும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் அவலவாழ்வை இத் தேசிய எழுச்சி மாநாட்டின் மூலமாக உணர்ந்து இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தம் கொடுக் க வேண் டும். ஆழிப்பேரழிவாலும் போர் நடவடிக்கை களாலும் பாதிப்புற்று இருக்கும் தமிழர்கள் நிம் மதியாகவும் தமது சொந்த இடங்களில் வாழ்வை அமைத்துக்கொள்ளவும், பாதிப்புற்ற மக்கள் நிவாரண உதவிபெறவும், புரிந்து உணர்வு ஒப் பந்த மீறல்கள், கொலைகள், ஆட்கடத்தல் போன்ற துயர சம்பவங்கள் நிறுத்தப்பட்டு, தமிழர்களுக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தர சகல சமூகமும், இலங்கை அரசும் முன்வர வேண் டும். சகல தமிழ் மக்களும், தமது கோரிக்கையை முன்வைத்து ஒன்றுகூடி நடத்தப்படும் இப் பேரெழுச்சி மாநாடு நன்மையளிக்க வேண்டு மென மனநிறைவு கொள்கின்றேன்.

*சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக்குருக்கள் (போ.நி.கண்காணிப்புக்குழு உறுப்பினர்),*
*பிரதமசிவாச்சாரியார்,முருகன்தேவஸ்தானம்,கிளிநொச்சி.*

## உலகுக்கு உணரவைப்போம்

தமிழர் செறிந்துவாழும் பகுதியான இலங்கையின் வடக்கு - கிழக்கு 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறதா? சர்வதேச சமூகம் இலங்கைத் தீவின் பிரச்சினை தொடர்பாக, முக்கியமாக இக்கேள்விக்கு விடைதேடவேண்டி உள்ளார்கள். சர்வதேச சமூகம் இலங்கைத் தீவின் பிரச்சினை தொடர்பாக முக்கியமாக இக்கேள்விக்கு விடை தேடவேண்டி உள்ளார்கள்.

இன்று பெருந்தொகையாகத் தமிழர் பிரதேச தத்தில் குவிக்கப்பட்டிருக்கும் படைகளில் தமி ழரை மருந்துக்கும் காணமுடியாது. இதற்குக் காரணம் இப்படை 20 வருடமாகத் தமிழர் மீது தொடுத்த கொடூரமான வன்செயல்கள்தான். இக்கொடூர சரித்திரமும் இன்று தமிழரற்ற இப்படையும் இதுவொரு ஆக்கிரமிப்புப் படை என்பதை உறுதி செய்கின்றது.

இன்று தமிழர் எழுச்சிப் பேரவை சர்வதேச சமூகத்திடம் இவ் உண்மையை உளமார உணர்ந்து அறியுமாறு வேண்டி நிற்கின்றது. இவ் உண் மையை சர்வதேச சமூகம் உணர்ந்தால், மக்களின் தன்னாட்சி உரிமையை மீட்டுத் தருவது அதன் கடப்பாடு என்பதையும் சர்வதேச சமூகம் அறியாமல் இருக்க முடியாது.

போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சர்வதேச சமூகம் போர்க்கொடுமையின் ஆழமான வடு தீர்வதற்கான வழிகளைப் பரிந்துரைத்தபோதும் அதை அரசு உதாசீனம் செய்தது. இதனால் சமாதான முன்னெடுப்புகள் உடைந்தன. ஆழிப் பேரலை அழிவால் மக்கள் துடித்த போது உதாசீனத்தின் உச்சத்திற்கு உதாரணமாக நடந்து காட்டியுள்ளது.

இக்கொடூரத்திலிருந்து மீள தமிழர் சர்வதேச சமூகத்திடம் வேண்டுவது தம் தன்னாட்சி உரிமையை அல்லாமல் வேறு எதையும் அல்ல.

*வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம்*
*கிளிநொச்சி.*

## எங்கள்பாட்டில் விடுங்கள்

முப்படையினரும் இனவாதிகளும் தமிழ் பேசும் மக்களை அழிக்கப் பெரும் பிரயத்தனம் கொண்டு செயற்படும் இவ்வேளையில் நாம் இனி சிங்கள அரசுகளை நம்பி ஏந்தப் பிரயோசனமும் இல்லை என்பதே உண்மை. தமிழ்பேசும் மக்கள் இறுதியும் முடிந்த முடிவுமாக இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டோம். ஆகவே, இதையொட்டி எமக்கு ஆறுதலும், பக்கபலமும் சேர்க்க வேண்டிய பொறுப்பு சர்வதேசத்திற்கு உண்டு. எனவே, இவ் ஒடுக்குமுறைகளைக் காட்டி எமது கோரிக்கைகளைச் சர்வதேசத்திற்கும் அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தும் முகமாக இன்று நடைபெறும் மக்கள் தேசிய எழுச்சிப் பிரகடனத்தின் மூலம் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளைச் சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவதற்கான பெரும்நிகழ்விற்கு அணிதிரள்வோம்.

*தலைவர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், கிளிநொச்சி மாவட்டம்.*

## எமது குரல் ஓங்கட்டும்!

தமிழ் மக்களாகிய நாங்கள் கடந்த காலப் புரிந்துணர்வு உடன்படிக்கைக் காலத்தில் எதுவித தீர்வுகளும் ஏற்படாமல் இழுத்தடிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளோம். இதனால், தமிழ் மக்கள் எழுச்சிகொண்டு எமது குரலை சர்வதேச சமூகத்திற்கு ஒலிக்கச் செய்கின்றோம். தமிழ் மக்களது அபிலாசைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வினை முன்வைப்பதற்குச் சிறிலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்க வேண்டுமென கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் மேம்பாட்டு ஒன்றியம் சர்வதேச சமூகத்தை கேட்டுக்கொள்வதுடன் செப்ரெம்பர் ஒன்றில் மக்களை அணி திரளுமாறு கேட்டுக்கொள்கிறது.

*பெண்கள் மேம்பாட்டு ஒன்றியம்.*

## ஓரணியில் திரள்வோம்

எங்கள் உரிமைகளை வென்றெடுக்கவும் எங்கள் உணர்வுகளைச் சர்வதேசத்திற்கும் எதிரி தேசத்திற்கும் வெளிப்படுத்தி, போரினால் எங்கள் தேசமும், எங்கள் மக்களும், குறிப்பாக பெண்கள் மீதான கொடிய வன்முறைகளைப் புரிந்துவரும் எதிரியின் கையாலாகாத்தனங்களை இனியும் ஏற்பதற்கு நாம் தயாரல்லர் என்ற உண்மை நிலைப்பாடுகளை இடித்துரைக்கும் உணர்வுமிகு தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வில் அனைவரையும் கிளிநொச்சியில் அணிதிரளுமாறு நேசக்கரம்பற்றி அழைக்கின்றோம்.

*பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் ஆண்கள் குழு, கிளிநொச்சி.*

## கடமையில் கை சேர்ப்போம்

தமிழ் மக்களின் எழுச்சிக் குரலாக தமிழ்த் தேசியத்தையும் சுய உரிமையையும் அங்கீகரிக்கக்கோரி கிளிநொச்சி மாநகர் வரலாற்றில் கண்டிராத மாபெரும் மனித உணர்வெழுச்சியைச் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தும் நிகழ்விற்கு கல்விப்புலம் சார்பாக அனைவரும் கடல் அணியாகக் கலந்து எமது உணர்வெழுச்சியையும் உரிமைப் பிரகடனத்தையும் சர்வதேசத்திற்கு பறைசாற்றுவோம்.

*கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை.*

## உலக மனச்சாட்சியின் உரத்த குரல்களுக்கு ஒரு விண்ணப்பம்! - புதுவை இரத்தினதுரை

எம்மண்ணில் இனிவரும் நாள்களில் ....
மந்தமாருதம் தழுவும் வசந்தோற்ஸவம்.
மரங்களுக்கு ருதுசோபனம்.
குயில்கள் எம் முற்றத்து வேம்புகளில் வந்து
குக்கூவெனக் குரலெடுத்துக் கூவும்.
அடுத்தடுத்து வரும் திங்கட்கிழமைகளில்
அம்மன் கோவில்களில் பொங்கல் நடக்கும்.
வேப்பிலையும், வெட்டரிவாளுமாக
காவலிருந்த தேவியின் மேனிகுளிரும்.
வெக்கை தணிந்து போவாள் வீரமாகாளி
எனினும் எம்மண் தன்னிலைமை மாறாது.
பணிதலறியாதவள் எம் தாய்.
கண்களில் மையும்;
கால்களில் சிலம்பெனினும்
கைகளிலிருந்து வீரவாள் நழுவாது.
சுற்றிவளைத்து எல்லைகளைச் சுருக்கி, தேசத்தை
சிறையிருத்திவிட்டு,
பேசலாம் வருகவென மேசைக்கழைத்து,
எச்சிற்சோறளித்து ஏமாற்றிவிடலாமென
யாரும் நினைத்தால்.....
பாவம் அவர்கள்.
வெட்டியடித்து விட்ட வெறும் வயலென்று
எட்ட நின்று எம்மைக் கணக்கிடுவோர் எவரெனிலும்
நாங்கள் முளைக்கப் போட்டிருக்கும் நாற்று மேடையை
முதலில் அளவெடுத்துக் கொள்ளுங்கள்.
உள்ளே எரிந்தபடி கிடக்கும் எரிமலையை
கொத்திப் பிளந்து குளிரவைப்போமென
எத்தனை பேர் வந்து போயினர்.
சோதிப்பிழம்பை எவராலும் தொடமுடியவில்லை.
பசித்த வயிறெனினும்
யாசித்தறியாதவள் எம் தாய்.
வாசலுக்கு எவர் வந்தாலும் வரவேற்பாள்;
அடங்கிப் போவென யாரும் பணித்தால்...
எக்காளத்தொனியில் எம்தாய் சிரிப்பாள்.
விழிகள் சிவந்துரு விரிய;
சீதளத் திருமுகத்தில் தீயெழ
பிள்ளைகளைப் போர்க்களமனுப்புவாள் பெருமாட்டி
உலக மனச்சாட்சிக்கு
ஒரு விண்ணப்பம்.
எத்தனை வதைபட்டு
இடிந்துள்ளோம்.
இங்கே...குஞ்சுகளை இழந்து
ஒவ்வொரு கூடும் துடிக்கிறது.
உயிரைக் கரைத்தெடுத்த
நீரில் உலையேற்றி
அமுது படைக்கின்றோம்.
எம்மை
தூக்கி நிறுத்த ஒருவரற்று
தோளிற் சுமைதாங்கியுள்ளோம்.
ஆண்டனுபவிக்க
ஒரு அரசுகட்டில்,
வேண்டுமென்பதற்காக
நாங்கள் போராடவில்லை.
பத்துத்
தலைமுறைக்குச்
சொத்துச் சேர்த்துவிட்டு
செத்து விட வேண்டுமென்ற
சொப்பனங்கள் எமக்கில்லை.
தங்கக் கட்டிலில் சயனிக்கும்
கனவேதும் கூட
எங்களுக்குக் கிடையாது.
எங்களை மனிதர்களாக...
எங்களைத் தமிழர்களாக...
வாழ வழிசமைத்தீர்களானால்...
கோடி நமஸ்காரம்.
உலக மனச்சாட்சியின்
உரத்த குரல்களே!
உண்மைக்கு ஒளியூட்டுங்கள்
தர்மத்துக்குச் சாட்சியாகுங்கள்.
"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்"
ஆதிக்கத்துக்கெதிராக
போரிடு என்று
அப்பர் சுவாமிகள் போதித்த
அனல் வரியிது.
குனிந்த தலை நிமிராது
பணிந்து போவென்று
எந்த மதமுமே
எடுத்துரைத்தது கிடையாது.
அடக்கவருபவர் முன்
அடங்கிப் போவென
கடவுளெவரும்
கட்டளையிட்டதில்லை.
அன்புக்கு தலை வணங்கு என்பது
ஆணவத்துக்குச்
சாமரம் வீசென்ற அர்த்தமல்ல.
சாந்தசொரூபம்.
சமரச தேவர்களென
நம்பி ஏமாந்த வரலாறே நமது.
களான்களுக்குக் குடைபிடித்து
கைசலித்தவர்கள் நாங்கள்.
கொஞ்சம் நிமிர்ந்து உட்கார நினைத்தாலே....
சிம்மாசனத்துக்குத் தீமூட்டி விடுகின்றனர்.
திறைசெலுத்தி சிற்றரசாக இருவென்றால்,
தமிழன் அங்க அடையாளங்களையிழந்து
அழிந்து விடுவான்.
நாங்கள் சாவுக்குத் தாலிகட்டி
பாடைக்குப் பரிசு கொடுப்பவர்களல்லர்.
அமைதிப்புறா வந்து தோளிலிருந்தால்...
அதைத் தட்டிவிடுபவர்களுமல்ல.
வெள்ளைப் பூக்களே எமக்கும் விருப்பம்.
இலை சொரிந்து மொட்டை மரமாகி
எழிலிழந்து கிடக்கிறது எம் வாழ்வு.
ஊற்றுவாய் அடைத்த கிணறு போல்
இடிந்து கொண்டிருக்கிறது எம் தேசம்.
புயலடித்த பூமி போல
அழகிழந்து விட்டாள் எம் அன்னை.
வாழ்வுக்கு ஏங்குவதே எம் வரலாறாகி விட்டது.
விலங்கற்றுக் கைகளை வீசி
எம் தெருக்களில் நடக்கவே விரும்புகின்றோம்.
நில்லென ஒருவன் நிறுத்தவும்,
செல்லென இன்னொருவன் உத்தரவிடவும்
எஜமானார்களற்ற பூமிக்கே ஏங்குகின்றோம்.
காற்றைப் போல ஒரு கட்டற்ற வாழ்வு
நேற்றெமக்கு இருந்தது.
மீண்டுமந்த வாழ்வை
எம் வாசலிற்காண அவாவுற்றோம்.
கேட்டோம்!
தரமறுத்த போதே
இந்தத் தர்மயுத்தம் கருக்கொண்டது.
எந்தவழியெனிலும்
எமக்கு வேண்டும் விடுதலை.
கோடி இன்னல்கள் வந்து குதறட்டும்.
ஆடி விழாது இந்த ஆலமரம்.
நிலத்தைப் பறித்து நெருப்பூட்டுவதால்...
பலமிழந்து போகாதெம் படையணி.
ஒன்று பத்தாகி... பத்து நூறாகி
வென்றொரு நாள் வீடுவரும் கன்றுகள்.
துப்பாக்கி வாயில்
உலோகச் சன்னங்களுக்குப் பதிலாக
பூக்களைச் சொருகச் சொல்கின்றீர்.
சரி, அப்படியே செய்கின்றோம் ஆண்டவரே!
எமக்கு விடுதலைப் பொருளைத் தருவதாக
இருந்தால்.....
உலக மனச் சாட்சியே!
சமுத்திரங்களைக் கடந்து
உங்கள் கைகள் நீளுகின்றன.
நமக்காகவென்றால்......
நன்றிகள்

நன்றி: உலைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களஞ்சியசாலை தேவை

*சர்வதேச நிறுவனம் ஒன்றிற்கு 6000-8000 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடம் களஞ்சியசாலைப் பாவனைக்குத் தேவை. அமைவிடமானது மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளுக்குள் இருத்தல் வேண்டும்.*

**விளம்பர இல. 2693** (21-32-14)

(சி-44875) **C/o உதயன், யாழ்ப்பாணம்.**


## போதைப்பாவனை குறித்து ஆய்வு

வலி.தென்மேற்கு,செப்.1

மாதகல் சகாயபுரம் கிராமத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் அண்மையில் போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. வீடுவீடாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் இக்கிராமத்திலுள்ள 162 குடும்பங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டன. 80 குடும்பங்கள் மதுபாவனையால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த ஆய்வின் போது கண்டறியப்பட்டுள்ளதாக சம்மேளனத்தின் செயலாளர் செ.குமாரசிங்கம் தெரிவித்தார். இதில் பத்துக் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-135)


## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிவஞானசோதி ஸ்ரீஸ்கந்தா

எமது கல்லூரியின் பழைய மாணவியும் பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவியுமான

**திருமதி சிவசோதி கந்தசாமி**

அவர்களின் அருமைச் சகோதரியுமான *திருமதி சிவஞானசோதி ஸ்ரீஸ்கந்தா* அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/இராமநாதன் கல்லூரி,**
**சுன்னாகம்.** (39506) **பழைய மாணவர் சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

### K.R சிவலோகநாதன் விதுர்ஷன்



*எமது அரிசி ஆலையின் உரிமையாளராகிய திரு. K.R.சிவலோகநானின் மகன் விதுர்ஷன் அவர்கள் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பந்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**இராசம் அரிசி ஆலை,** (39503)(32-14)
**மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.** **பணியாளர்கள்.**

S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

# தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




## எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) [illegible] கொழும்பு 02.
தொலைபேசி: [illegible]


## நாடக அரங்க போட்டிகள்

வலி.தெற்கு,செப்.1

வலிகாமம் கல்வி வலயத்தில் சிறுவர் நாடக அரங்கு நிகழ்வுகளுக்கான போட்டிகள் செப்ரெம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் நடைபெறவுள்ளன.

உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய கோட்டங்கள் ரீதியாக இவை நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் பங்கு பற்றவிரும்பும் பாடசாலைகள் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 05 ஆம் திகதிக்கு முன்பாகச் சம்பந்தப்பட்ட கோட்டங்களில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

## உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்குக் கணனி

வலி.தெற்கு,செப்.1

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவன கல்வித் தேவைக்கென 50 கணனிகள் கிடைத்திருப்பதாக நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்தில் உயர்தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் -

அந்தப் பயன்பாட்டுக்காக இக்கணனிகள் உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளதாகவும் - அவர் தெரிவித்துள்ளார்.

உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாகவும் அவர் தெரி வித்தார். (ஒ-152)

## உணவு தந்தோரிடம் திருடிய சிறுமி

தென்மராட்சி,செப்.1

வேலை தருமாறு வீட்டுக்காரரிடம் கேட்ட சிறுமி அங்கு மதிய உணவு அருந்தி விட்டு அங்கிருந்த கையடக்கத் தொலைபேசியை அபகரித்துச் சென்றுள்ளார்.

இச் சம்பவம் சமீபத்தில் மீசாலையில் இடம் பெற்றது. இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

வீடொன்றுக்குக் காலைவேளை வந்த சிறுமியொருவர் வேலை தருமாறு கெஞ்சிக் கேட்டாராம். சிறுமி மீது இரக்கம் கொண்ட வீட்டுக்காரர் காலை உணவும் மதிய உணவும் வழங்கிய பின்னர் சிறிது பணமும் கொடுத்தனராம்.

சிறுமி சென்ற பின்னர் அங்கிருந்த கையடக்கத் தொலைபேசி காணாமல் போயிருந்ததை அவதானித்து சிறுமியைத் தேடிய போது அகப்படவில்லையாம். (ஒ-117)

## கோழிகளுக்கு தடுப்பூசிகள்

வலி.தென்.மேற்கு,செப்.1

சண்டிலிப்பாயிலுள்ள வலி.தென்.மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. 'ரனிகற்' என்று அழைக்கப்படும் அம்மை நோய் தடுப்பு ஊசி மருந்து ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும், கம்போறா நோய்க்கான தடுப்பு மருந்து சனிக்கிழமைகளிலும் இங்கு வழங்கப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- கால் நடைகளுக்கான பூச்சி மருந்து உட்பட தேவையான மருந்துகள் சண்டிலிப்பாய் கால்நடை வைத்திய அதிகாரியின் சிபார்சின் பேரில் இங்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதே சமயம் கொழும்பிலிருந்து நல்ல இன ஒரு நாள் கோழிக்குஞ்சுகளும் சங்கப் பணிமனையில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுவருகின்றது. கோழிக்குஞ்சு அடைவைப்பதற்குத் தேவையான அடை முட்டைகளையும் இங்கு பெற்றுக்கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

## இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். மத்திய கல்லூரியில் இந்து மன்ற அனுசரணையுடன் நல்லூர் கந்தன் பாமாலை ஒலி இசைத்தட்டு, ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி பிரதி அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார். ஒலிப்பேழையை யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா வெளியிட்டுவைக்க யாழ். வணிகக் கழகத் தலைவர் இ.ஜெயராசா பெற்றுக்கொள்வார்.

ஒலிப்பேழையின் இசை அமைத்துப் பாடியவர் இசைக்கலாவித்தகர் சிவஸ்ரீ சோம உமாரமணக் குருக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

## சர்வதேச சமூகத்தைத் தட்டி எழுப்புமா இன்றைய தேசிய எழுச்சிப் பிரகடனம்?

தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறுகின்றது. அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற தேசிய எழுச்சி மாநாட்டிற்குப் பலம் சேர்க்கும் வகையிலேயே கிளிநொச்சி மாநாடு ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை - எதிர்பார்ப்பை - விருப்பை - அவாவை - ஏகோபித்து மீண்டும் வெளிப் படுத்தும் ஓர் எழுச்சி நிகழ்வாக இம்மாநாடு அமைகிறது.

''எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்குவதை வெளிப்படுத்தும் எழுச்சி மாநாடு இது'' - என்று மாநாட்டின் அழைப்பாளர்களான கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன செயலணியினர் அறிவித்திருக் கின்றர்.

'எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்ளல்' - என்பதுதான் சுயநிர்ணய உரிமையாகும். அந்த வகையில் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை வெளிப்படுத்தும் - வலியுறுத்தும் - உலகுக்குப் பறைசாற்றும் - எழுச்சி மாநாடு இது எனலாம்.

வரலாற்று ஓட்டத்திலே பல்லினப் பண்பாட்டு வடிவங்களைக் கொண்ட இலங்கைத் தீவில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொடர்ச்சியாகவும், நீட்சியாகவும் செல்லக் கூடிய ஆழமான - தனித்துவமான - புறம்பு புறம்பான - தொன்மை மிக்க - வரலாற்று வேரோட்டங்களைக் கொண்டவர்கள்.

இந்தத் தனித்தனித் தேசிய இனங்களில் ஒன்று மற்றொன்றை ஒழித்து, கபளீகரம் செய்து, அழிக்க எடுத்த முயற்சியினதும், அதற்கு எதிராகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள மற்றைய இனம் மேற்கொண்டு வரும் தற்பாதுகாப்புப் போராட்டத்தினதும் களமாக இப்போது அமைந்திருக்கிறது இலங்கைத் தீவு.

வேறுபட்ட மொழிகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், வேறுபட்ட தாயகப் பிரதேசங்கள், வெவ்வேறான வரலாறுகளைக் கொண்ட இரு தேசிய இனங்களின் ஊற்றுக் கண்ணாகத் திகழும் இலங்கைத் தீவில் இரு நாகரிகங்களுமே சரித்திர ரீதியாகத் தனித்தனி ஆட்சிமுறைகளையும் அரசுகளையும் கொண்டிருந்தன.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர்கள் இந்தத் தீவில் காலடி எடுத்து வைத்தபோது, வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் தமிழ் மக்களும், தெற்கே சிங்கள மக்களும் தனித்தனிப் பாரம்பரியங்களோடு, பண்பாடுகளோடு வாழ்ந்து கொண்டிருந்ததையும், இரண்டு புராதன அரசுகள் கோலோச்சிக் கொண்டிருந்ததையுமே கண்டார்கள்.

காலப்போக்கில் போர்த்துக்கேயரும், தொடர்ந்து ஒல்லாந்தரும் இலங்கைத் தீவின் பல பகுதிகளையும் கைப்பற்றித் தமது ஆளுகைக்கு உட்படுத்தியபோதிலும், அவர்கள் இருவருமே தமிழர் தேசத்தை தனி இராச்சியமாக ஆண்டு தமிழர் தாயகத்தின் பிரதேச ஒருமைப்பாட்டைத் தொடர்ந்து பேணி, தமிழ்மக்களின் இனத்துவ அடையாளத்தை அங்கீகரித்துக் கொண்டனர்.

1799இல் இலங்கைத் தீவுக்குள் புகுந்த ஆங்கிலக் குடியேற்ற சாம்ராச்சியம், தீவின் கட்டுப்பாட்டை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றியபோது தனது கைவரிசையைக் காட்டி நிலைமையைத் தலைகீழாக்கியது.

தமது ஆட்சி வசதிக்காக, அதுவரை தனித்தனியாக இருந்த தமிழர் தேசத்தையும், சிங்கள தேசத்தையும் 1833 இல் ஒன்றாக்கி, ஒற்றை ஆட்சி அமைப்பைத் திணித்தனர் பிரித்தானியர். அந்நிய குடியேற்ற வாதம் - காலனித்துவம் - இவ்வாறு இலங்கைத் தீவில் மேற்கொண்ட திணிப்புத்தான் இன்றைய தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு அடித்தளமிட்டது.

தமது நிர்வாக நோக்கங்களுக்காக ஒற்றையாட்சி முறையை வலிந்து - வல்வந்தமாக - இலங்கைத் தீவுக்குள் புகுத்திய வெள்ளையர்கள், தீவை விட்டு வெளியேறும் சமயத்தில் அதே ஒற்றையாட்சி முறையின்கீழ், எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் தமிழர் தேசத்தின் ஆட்சி அதிகாரத்தையும் ஒப்படைத்துச் சென்றனர்.

இலங்கைத் தீவின் சுதந்திரம் என்ற பெயரால் 1948இல் தீவின் அரசியல் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மையினரிடம் கைமாறியதை அடுத்து சிங்களப் பேரினவாதம் மேலாண்மை பெற்றது. சிறுபான்மையினரான தமிழருக்கு எதிரான அரச அடக்கு முறை குரூர வன்முறை வடிவம் பெற்று தமிழின ஒழிப்பு நடவடிக்கையாக வெளிப்பட்டது. தமிழர் தேசத்தின் ஆதாரமான - அடித்தளமான - கட்டுமானங்களைச் சிதைத்து, இனத்தனித்துவத்தைச் சிதறடித்து, ஒன்றுபட்ட ஒரு தேசிய இனத்தை இல்லாதொழிக்கும் சதித் திட்டமாக மேலாண்மைவாதம் அரங்கேறத் தொடங்கியது. இந்த இன அடக்குமுறை, பலமுனைத் தாக்குதலாக வடிவெடுத்து வெளிப்பட்டதை கடந்த ஐம்பத்தைந்து வருட கால வரலாறு பறைச்சாற்றுகின்றது.

இனத்தின் இருப்புக்கு ஆதாரமான மொழி உரிமை தமிழர்களிடமிருந்து முதலில் பறிக்கப்பட்டது. சிங்களமே அரச கரும மொழியாயிற்று.

அதனைத் தொடர்ந்து கல்வி உரிமை பிடுங்கப்பட்டது. வேலை வாய்ப்பு உரிமைக்கு ஆப்பு வைக்கப்பட்டது. பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்து உரிமை திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் அபகரிக்கப்பட்டது. இறுதியாக தமிழரின் உயிர் வாழும் உரிமைக்கே - இருப்புக்கான உரிமைக்கே - பங்கம் விளைவிக்கும் வகையில் இராணுவ அடக்குமுறையும் ஒடக்கு முறையும் தமிழினம் மிது கட்டவிழ்த்து ஏவி விடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் ஓர் இனமாக - ஒரு தேசிய இனக்குழுமமாக - ஒருங்கிணைந்து வாழ்வதற்கும், ஓர் இனமாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கும் அவசியமான அடித்தளத்தையே இல்லாதொழிக்கும் அரச பயங்கரவாதம் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையில் தமிழர்கள் இன்று இருக்கின்றார்கள்.

அரசியல் உரிமைகோரி, தமிழ் மக்கள் தொடுத்த அமைதி வழிப் போராட்டம் சிங்கள இனவாத அரசுகளால் ஆயுத வழியில் -மிருகத்தனமான முறையில் - இராணுவ ரீதியில் - அடக்கப்பட்ட நிலையில், 'முள்ளை முள்ளால் எடுக்கும்' கட்டாயத்துக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டார்கள். இதுவே இன்றைய வரலாற்றுப் புறநிலை.

இந்நிலையில் இந்த உண்மையை சர்வதேச சமூகத்துக்கு ஓங்கி அறைந்து ஒப்புவித்து தமிழர் தரப்பு நியாயத்தையும் அவர்களின் உரிமைப்போருக்கான அங்கீகாரத்தையும் உலக சமுதாயத்திடமிருந்து கோருவதற்காக இன்றைய தேசிய எழுச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

தனியான தாயகத்தையும், பாரம்பரிய வாழ்நிலத்தையும், பண்பாட்டையும், குடிசனப் பரம்பலையும் கொண்ட ஓர் இனம் - ஒரு தேசம் - தனது தலைவிதியைத் தானே நிர்ணயித்துக் கொள்ள விரும்புகிறது. சுயநிர்ணய உரிமைக்கான அனைத்து அடிப்படைகளையும் கொண்ட தமிழர் தேசம் தனது மரபு வழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்தை இந்தத் தேசிய எழுச்சி மாநாடு மூலம்-வற்புறுத்தி - வலியுறுத்தி - கோருகின்றது.

இந்தத் தேசிய எழுச்சி மாநாடு மூலம், தமிழினம் கிளர்ந்தெழுந்து தனது உரிமைக்குரலாக வெளிப்படுத்தும் பிரகடனம் சர்வதேச சமூகத்தின் காதுகளை எட்டவேண்டும். உலக சமுதாயத்தின் சிந்தனையைத் தட்டிவிட்டு, தமிழினத்தின் நியாயத்தை அதற்கு உணர்த்த வேண்டும். அதை உணர்ந்து கொண்டு உரிய பிரதிபலிப்பை சர்வதேச சமூகம் வெளிக்காட்ட வேண்டும். -இதுவே தமிழர்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும்.

# யாழ். மின்சாரசபை அலுவலகத்தை கணனிமயப்படுத்த விரைந்து ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.1

இலங்கை மின்சாரசபையின் யாழ். அலுவலகம் கணனி மயப்படுத்தப்படவுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கென கணனி வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத்தொகுதி யாழ். மனோகரா திரையரங்கச் சந்திக்கு அருகில் அமைக்கப்பட்டு வருகின்றது.

விரைவில் பூர்த்தியாகும் என எதிர் பார்க்கப்படும் இக்கட்டடத் தொகுதியில் இலங்கை மின்சார சபையின் யாழ். அலுவலகம் செயற்படும் .

இந்த அலுவலகம் செயற்பட ஆரம்பித்தவுடன் மின்சாரக் கட்டணம் செலுத்துவதில் உள்ள நெருக்கடி தவிர்க்கப்படும் எனவும் -

பொதுமக்கள் செலுத்தும் மின்கட்டணம் உடனுக்குடன் வரவு வைக்கப்பட்டு, நிலுவை காட்டப்படும் எனவும் - மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் மின்சாரக் கட்டணம் தொடர்ந்து 3 மாதகாலத்திற்கு நிலுவையில் இருந்தே, பின்னர் வரவு வைக்கப்படுகிறது.

இதேவேளை - தபாலகங்கள், வங்கிகள் ஊடாக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நடைமுறை தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-12-15)

# பேரலை பாதித்த பிரதேசங்களின் மீள்கட்டுமானத்திற்கு ரூ.379 கோடி

### உதவி வழங்கும் நிறுவனங்களிடமிருந்து யாழ். மாவட்டத்திற்கு

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானத்தின் பொருட்டு 379 கோடியே 69 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவிலான பணிகளைச் செய்துதருவதற்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் முன் வந்துள்ளன.

குடிதண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டத்திற்கு 45 கோடியே 50 லட்சம் ரூபாவிலும் விவசாயத்திற்கு 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவிலும் -

கல்விக்கு 55 கோடியே 55 லட்சம் ரூபாவிலும் வீதி அபிவிருத்திக்கு 18 கோடியே 30 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவிலும் -

மீன்பிடித்துறைக்கு 215 கோடியே 29 லட்சம் ரூபாவிலும் நீர்ப்பாசனத்திற்கு 45 கோடி ரூபாவிலும் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவும் நிறுவனங்கள் முன்வந்துள்ளன என்று யாழ். செயலகத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவர அறிக்கை தெரிவிக்கின்றது.

இதேவேளை -

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டிய உதவும் நிறுவனங்கள் தாம் செய்வதற்கு முன்வராத வேலைத்திட்டங்கள் குறித்தும் அந்த புள்ளிவிவர அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

விவசாயத்திற்கு 2 கோடியே 26 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் கூட்டுறவுக்கு 5 கோடியே 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவும் தொழில்நிறுவனங்களுக்கு 5 கோடியே 39 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும்-

பொதுக் கட்டடங்களுக்கு 15 கோடியே 68 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மின்சாரத்துறைக்கு 15 கோடியே 53 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் வீதிக்கு 38 கோடியே 50 லட்சம் ரூபாவும் -

மீன்பிடித்துறைக்கு 93 கோடியே 39 லட்சம் ரூபாவும், சுகாதாரத்திற்கு 5 கோடியே 30 லட்சம் ரூபாவுமாக 181 கோடியே ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவிற்கான புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-202-204)

## முற்றவெளி பஸ்நிலையம் அடுத்த வாரம் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.முற்றவெளியில் அமைக்கப் பட்டு வரும் தனியார் பஸ் தரிப்பிடக் கட்டடம் அடுத்த வாரம் முற்பகுதியில் திறந்துவைக்கப்படவுள்ளது என்று மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டடத்தின் வேலைகள் யாவும் பூர்த்தியான நிலையில் உள்ளதாகவும் -

இதன் திறப்பு விழாவை மிகப்பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கட்டடம் கடந்த ஜூன் மாத முற்பகுதியில் திறந்து வைக்கப்படவிருந்த போதிலும் சில தவிர்க்க முடியாத காரணத்தினால் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ-13)

### புலிகளின் குரல் ஏற்பாட்டில்

## கிட்டு, திலீபன் நினைவுக் கலையரங்கம் நாளை முதல் நல்லூரில் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர் பெருந்திருவிழாவையொட்டி புலிகளின் குரல் நிறுவனம் கேணல் கிட்டு மற்றும் தியாகி திலீபன் நினைவாக சிறப்பு முத்தமிழ் கலையரங்கத்தை நல்லூர் ஆலயச் சூழலில் மூன்று நாள்கள் நடத்தவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை முத்தமிழ் கலையரங்கு இடம்பெறவுள்ளது.

இதில் நிகழ்வுகள் தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

இக் கலையரங்கில் தமிழீழ இசைக் கலைஞர்களின் இசையரங்கு, கவியரங்கு, உட்பட பல நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கடந்த மூன்று வருடங்களாக புலிகளின் குரல் நிறுவனம் நல்லூர் ஆலயத்தின் பெருந்திருவிழாவையொட்டி சிறப்பு முத்தமிழ் கலையரங்கத்தினை நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## பாடசாலை மாணவரை காணவில்லையென முறைப்பாடு!

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற பாடசாலை மாணவர் ஒருவரைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவரான மாசிலாமணி - யூட்ரெனி (வயது 18) என்பவரே காணாமற்போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த 15ஆம் திகதி தனியாகக் கொழும்பு சென்றார் என்றும் -

வவுனியாவில் இருந்து கடைசியாக தொலைபேசியில் வீட்டாருடன் தொடர்பு கொண்டார் என்றும் -

அதன் பின்னர் அவரைக் காணவில்லையென்றும் - அவரது தந்தை முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் காணாமற் போனோர் விசாரணை அதிகாரி செல்வி ரி.மொறின் மேற்கொண்டுவருகிறார். (ஒ-7)

# நாட்டரசன் கோட்டையை காப்பாற்றக் கோரிக்கை

நெடுந்தீவு,செப்.1

நெடுந்தீவின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றான வெடியரசன் கோட்டை சேதமடைந்து காணப்படுகிறது. இக் கோட்டையின் அருகில் உள்ள ஆலமர வேர் இக்கோட்டைச் சுவர்களைப் பற்றிப் படர்ந்துள்ளதனால் அவற்றில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. சில இடங்களில் தரையையண்டிய பகுதிகளில் கற்கள் உடைந்து வீழ்ந்துள்ளன.

எனவே, இக்கோட்டை மேலும் அழிவிற்குள்ளாகாமல் பாதுகாக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

நெடுந்தீவில் உள்ள வரலாற்றுச் சின்னங்களான வெடியரசன் கோட்டை, வீகாமன் கோட்டை, காராப்பிட்டியில் உள்ள கால் அடையாளம், குதிரை லாயம், நெடுந்தீவு கிழக்குப் பகுதியில் உள்ள பெருக்கமரம், இராணிமரம் போன்றவையும் காடுகளில் சுற்றித்திரியும் குதிரைகளும் சுற்றுலாப் பயணிளை கவரும் அம்சங்களாக உள்ளன. (ஒ-51)

# அகலப்படுத்தும் திட்டத்தின் கீழ் முதலில் மூன்று வீதிகளில் பணிகள்

யாழ்ப்பாணம்,செப்.1

'சிறாப்' திட்டத்தின் கீழ் மூன்று வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட 5 வீதிகளில் முதலில் மூன்று வீதிகளிற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் த.கணேஸ் தெரிவித்தார்.

இத் திட்டத்தின் கீழ் யாழ். - கண்டி வீதி, யாழ். - பலாலி வீதி, யாழ். - பண்ணை வீதி, யாழ். - பருத்தித்துறை வீதி, யாழ். - காரைநகர் வீதி ஆகியவற்றை அகலப் படுத்தவும், புனரமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. அவற்றில் யாழ். - காரைநகர் வீதி, யாழ்.பண்ணை வீதி, யாழ்.- பருத்தித்துறை வீதி ஆகியவற்றில் முதற் கட்டமாக அகலமாக்கல் மற்றும் புனரமைத்தல் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

மேற்படி வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும்போது பொதுமக்கள் தமக்கு ஏற்படும் பாதிப்புகளை மட்டும் கவனத்தில் எடுக்காது, எதிர்காலத்தில் ஏற்படப் போகும் நன்மைகளையும் கவனத்தில் கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஓ-ரி)

## உதயவாக்கு

இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கின்றான். அதற்குப் பணிந்து போவதற்கல்ல.

## நாளை

ஆவணி 17
வெள்ளிக்கிழமை
02.09.2005
திதி: சதுர்த்தசி
முன்னிரவு 11.01 வரை
நட்சத்திரம் : ஆயிலியம்
பிற்பகல் 03.06 வரை
சுபநேரம்: 06.05 - 07.35
ராகுகாலம்: 10.35 -12.05
(யாவும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததானம்

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் மானிப்பாய் பிராந்திய சமாதானக் குழுவின் ஏற்பாட்டில் இன்று இரத்ததானம் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவன கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெறும். 25இற்கும் மேற்பட்ட சமாதானக் குழு உறுப்பினர்கள் இரத்ததானம் வழங்குவர். (ஒ-152)

## வீதி மின்விளக்கு பொருத்தும் பணி விரைவில் நிறைவு

வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணி குடாநாட்டில் 90 சதவீதம் பூர்த்தியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிக்கொட் திட்டத்தின்கீழ் மின்சார சபையால் வீதிகளுக்கு மின்விளக்குப் பொருத்தும்பணி இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நல்லூர் உற்சவ காலம் முடிவடைந்த பின்னர், ஏனைய வீதிகளுக்கும் மின் விளக்குகள் பொருத்தப்படும் எனவும் -

சில இடங்களில் விசமிகள், வீதிகளுக்கு பொருத்தும் மின்விளக்குகளைச் சேதப்படுத்துகின்றனர் எனவும் -

மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-12)

## நுளம்பு வலை வழங்குவதற்கு லயன்ஸ் திட்டம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் உள்ள சிறார்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தன்று நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (த-117)


# 2 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்

01-09-2005




குகனேஸ்வரன் - ரஜீனா
தம்பதியரின்
இரட்டைச் செல்வப்
புதல்விகள்
திஷோதா, தினோஷா

ஆகியோர் தமது இரண்டாவது பிறந்த நாளை இன்று(01-09-2005) வியாழக்கிழமை மீசாலை மேற்கு பங்களா வீதியில் உள்ள தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்களை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தி, காரைநகர் குகனேஸ்வரி மாமி குடும்பத்தினர், தவமலர் மாமி குடும்பத்தினர், தர்சினி மாமி குடும்பத்தினர் மற்றும் சுவிஸில் உள்ள பத்மராசா சித்தப்பா, குட்டிச்சித்தப்பா, ரவி மாமா குடும்பத்தினர், பெரியம்மா, டென்மாக் சண்பெரியப்பா குடும்பத்தினர், ஜேர்மனி கலாநிதி மாமா குடும்பத்தினர் மற்றும் அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளும் பெற்றுச் சீருஞ் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு.

(39433)(26-14-15)

தகவல்:
குடும்பத்தினர்.



SAAMSTECH இன் கல்வி மற்றும்
தகவல் தொழில் நுட்பப் பணிகளுக்கான

# பயிற்சியும் பணிநியமனமும்

ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் கணினி அலுவலர்க்கான 3 மாத பயிற்சியும் பணிநியமனமும்

**பிரிவு 5**

பயிற்சிக் கட்டணம்: ரூபா 12,000/-

கல்வித்தகுதி : க.பொ.த உயர்தரம் அல்லது பட்டம்
இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதியோரும் விண்ணப்பிக்கலாம்.

முதலில் வரும் 40 பேர் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவர்

பணி நியமனம் : 05.12.2005

சுயமாகப் பூர்த்தி செய்யப்பட்ட சுயவிவரக்கோவை மற்றும் சான்றிதழுடன் இன்று அல்லது நாளை நேரில்வரவும்.

# SAAMSTECH
TEACHERS TRAINING COLLEGE
841, HOSPITAL RD, CHUNDIKULI ,JAFFNA. 021-4591571
(38657)



# திருமணக் கார் (குளிரூட்டியது)

வாடகைக்கு



+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467. (38657)

தொடர்பு: ரட்ணம்,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்குத் தகுதியான எமது சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து உள்வாரியாகவும், வெளிவாரியாகவும், விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி என்ற முகவரிக்கு 15.09.2005 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பு கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

**பதவி விவரம்:**

| | |
|---|---|
| 1. உள்ளக கணக்காய்வாளர் | சம்பள குறியீட்டு இல. 105/11 |
| 2. வர்த்தக முகாமையாளர் | சம்பள குறியீட்டு இல. 106/9 |

மேற்படி பதவிக்கான சம்பள விவரங்கள், கல்வித் தகைமை, வயது போன்ற மேலதிக விவரங்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வேலை நாள்களில் பார்வையிடலாம். (கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

பொது முகாமையாளர்,
வலி.கிழக்கு வடபகுதி,
ப.நோ.கூ. சங்கம்,
அச்சுவேலி.

29.08.2005

(சி-44690)(26.14.15)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 31 - 08 - 1924



விண்ணில் 11 - 09 - 2004

அமரர்

## கதிரவேலு சுந்தரமூர்த்தி (பப்பா)

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
எமை ஆளாக்கி வாழவைத்த அன்புத் தெய்வமே
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
ஆத்மசாந்திக்காய் என்றும் பிரார்த்திப்போம்

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

அளவாவோடை,
சுன்னாகம். (39475)(26.14.15)

- குடும்பத்தினர்.


# வேலையாள்கள் தேவை

புடைவை விற்பனை நிலையத்திற்கும் தொலைத்தொடர்பு நிலையத்திற்கும் வேலையாள்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும்.

தொடர்பு : துனிஸ் ரெக்ஸ்,
மூத்தநயினார் கோயிலடி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.



# IIS CITY CAMPUS

**BSc IT / BBA**

மாணவர்களே !

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த சர்வதேசப் பல்கலைக்கழகமொன்றின் மேற்படி கற்கைநெறிகளை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். குடாநாட்டு மாணவர் களுக்கு வரப்பிரசாதமாக அமையவுள்ள இச்சந்தர்ப்பத்தின் மூலம் நீங்கள் பட்டதாரியாக வேண்டுமென்ற கனவினை நனவாக்கிக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களை
செப்ரெம்பர் 5ம் திகதி உதயன் பத்திரிகையில் எதிர்பாருங்கள்.

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P.No.: 021 222 8060, 021 222 2201


# இறைவனுக்கும், குருவிற்கும் நன்றி கூறல்

வேலணை முத்துமாரியம்மன், அத்தியடி விநாயகர், நல்லூர் முருகன் பேரருளினாலும், யாழ்ப்பாண இந்துக் கல்லூரி முன்னாள் புவியியல் ஆசிரியர்கள் திருவாளர் V.மகாதேவா மற்றும் அமரர்களான M.P. செல்வரெத்தினம், S.சுப்பையா, T. சேனாதிராஜா, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களான G.G. R.தம்பையாபிள்ளை, B.L. பண்டிதரத்தினா, அமரர்களான பேராசிரியர்கள் K. குலரெத்தினம், S.செல்வநாயகம், டறம் பல்கலைக்கழகப் புவியியற் பேராசிரியர்களான B.D. கிளாக், J.I. கிளாக், G.H.பிளேக் ஆகியோரின் சிறந்த கற்பித்தலினாலும், வழிநடத்தலினாலும், 40 வருட காலப் பல்கலைக்கழகப் புவியியல் கற்பித்தல் பணியில் பேராசிரியர் பணி நிலையில் 25 வருட நிறைவையிட்டு இறைவனுக்கும், இவர்களுக்கும் எனது சிரம் தாழ்த்திய வணக்கத்தையும், மனம் நிறைந்த பக்தியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் எனக்கு வாழ்வுதந்த பேராதனை, டறம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களுக்கு நன்றியுடையேன்.

மேலும் எனது புவியியல் நண்பர்கள், மாணவர்கள் மற்றும் அன்பர்கள் யாவருக்கும் எனது அன்பு உரித்தாகுக.

பேராசிரியர்
பொ. பாலசுந்தரம்பிள்ளை,
Ph.D. (Durham) J.P.

(39485)(46.14.15.26)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 ★ 04 ★ 1934



விண்ணில் 12 ★ 09 ★ 2004

## திருமதி மயில்வாகனம் கனகம்மா

திதி: 01-09-2005

பெற்றெடுத்த நாள் முதலாய் பிரியமுடன் எமை வளர்த்து
அன்போடும் பண்போடும் அரவணைத்து அறிவூட்டி
எம்மை எல்லாம் பிரியமுடன் வழிநடத்தி நின்றீரே!
எப்பிறவி எடுத்தாலும் உம் வயிற்றில் பிறந்திட
வரம் ஒன்று வேண்டுமென்று இறைவனிடம் வேண்டுகின்றோம்.

ம.சுந்தரராசா குடும்பத்தினரும்
(மகன்),
தி.மகேந்திரன் குடும்பத்தினரும்
(மருமகன்).

32/10, அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு.

(39442)(46-14-15-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. - ஹெலஉறுமய பேச்சு தோல்வி!

கொழும்பு,செப்.1

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும் அதன் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடந்த பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வண. அத்துரலிய ரத்ன தேரர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, வண. அத்துரலிய ரத்ன தேரர் தலைமையிலான பிக்குகள் குழு ஒன்று நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியது.

ஜனாதிபதித் தேர்தல், புரிந்துணர்வு உடன்படிக்கை, சமாதானப் பேச்சு என்பன போன்ற விடயங்கள் இந்தப் பேச்சில் முக்கியமாக ஆராயப்பட்டன. தேர்தலில் தமது ஆதரவைப் பெறுவதற்குத் தமது கட்சியின் நிபந்தனைகள் சிலவற்றை ஐ.தே.க. ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஹெல உறுமயக் குழுவினர் வலியுறுத்தினர்.

பேச்சுக் குறித்து பின்னர் கருத்துத் தெரிவித்த வண. அத்துரலிய ரத்ன தேரர், ''பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்ற போதும் வலதுசாரி ஐ.தே.கவுடன் கூட்டணியை உருவாக்க இயலாது என்றே தோன்றுகின்றது'' - என்றார்.

தமது கட்சியின் நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டார். எனினும் எதிர்காலத்தில் கூட்டுச் சேர்வது குறித்த நம்பிக்கை தரும் பதில் எதனையும் அவர் தெரிவிக்கவில்லை என்றும் ரத்ன தேரர் கூறினார்.

# ஜே.வி.பி. நிபந்தனைகளில் பலவற்றை ஏற்றார் பிரதமர் !

கொழும்பு,செப்.1

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பியினர் முன்வைத்த நிபந்தனைகள் பலவற்றை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார் என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

ஜே.வி.பியின் தலைமைச் செயலர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கடந்த திங்கட்கிழமை இரவு அலரிமாளிகையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடன் உத்தியோக பூர்வமான முதல் சுற்றுப் பேச்சுகளை நடத்தினர்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமருக்கு ஆதரவளிப்பதற்காக ஜே.வி.பியினால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

ஜே.வி.பியினரால் முன்வைக்கப்பட்ட பல நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்குப் பிரதமர் முன்வந்தார் எனவும் அலரிமாளிகை வட்டாரங்கள் கூறின. சில விடயங்களில் ஜே.பி.யினர் இறங்கிவர வேண்டும் எனப் பிரதமர் கோரினார் எனவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், தற்போது வெளிநாட்டிற்குச் சென்றிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியவுடன் இந்தப் பேச்சுகள் குறித்து அவருக்கு விளக்குவதற்குப் பிரதமர் மகிந்த நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் எனவும் அலரிமாளிகை வட்டாரங்கள் மேலும் கூறின.

(க-3)

# யாழ்.பல்கலை வெளிவாரிப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளன.

வணிகமாணி பகுதிI - 2002 இற்கு எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி வரையும்-

வணிகமாணி பகுதிII - 2002 இற்கு எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையும்-

வணிகமாணி பகுதிIII - 2002 இற்கு எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 3ஆம் திகதிவரையும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் வணிகமாணி பகுதி I மற்றும் பகுதிII இற்குத் தோற்றுபவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கமும்-

வணிகமாணி பகுதி III இற்குத் தோற்றுபவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் வெளிவாரிப்பட்டப் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-202)

## அதிபர் பதவி வெற்றிடம்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, புதுமடம் றோ.க பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகி உள்ளன. 12.09.2005 இற்கு முன் பொருத்தமானவர்கள் இப்பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ-152)

# சாயி சிந்தனை

## உலகம் நலம் பெறட்டும்



*இன்று மனித மனம் தீயகுணங்களான கோபம், வெறுப்பு, பேராசை, பொறாமை, பெருமை, வெளிவேஷம் இவையெல்லாம் நிறைந்த ஒரு இருட்டுச் சுரங்கமாக மாறிவிட்டிருக்கிறது. அன்பினால் மட்டுமே இத்தகைய எதிர்மறை எண்ணங்களை விரட்டமுடியும். ஆசை, கோபம், பொறாமை இவையெல்லாம் தேகப்பற்றினாலும் தவறான உணவுப் பழக்கங்களாலும் உருவாகின்றன. அதனால்தான் குறைந்த சுமை, நிறைந்த சுகம், பயணம் இனிதாகும் எனக்கூறுகின்றனர்.*

*ஆகவே சுகமான வாழ்க்கைப் பயணத்துக்குச் சுமைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். இவ்வுடலின் துணையோடுதான் வாழ்க்கைப் பயணம் நடக்கிறது என்பதால், தேகத்தின் மேல் பற்று ஓரளவுக்கு இருக்கலாம். குடும்பத்தோடும் நண்பர்களோடும் வாழும்போது தேகப்பற்றினை விட்டுவிடுவது என்பது இயலாது.*

*ஆனால், மனிதன் ''லோகாஸ் ஸமஸ்தா ஸுகினோ பவந்து'' (உலகம் முழுவதும் நலமாக இருக்கட்டும்) என்ற எண்ணத்துடன் புனித வாழ்க்கை நடத்த வேண்டும்.*

*(சனாதன சாரதி)*






# சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,செப்.1

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.04 மணிக்கு நடைபெறும்.

இதன் பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறும். (ஒ-28-202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.1

மாதகல், பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலய சங்காபிஷேக தின விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகின்றது.

சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அம்மன் திருவீதிஉலா இடம் பெறும். (ஒ-15-202)

* * *

சுழிபுரம்,செப்.1

வட்டு.மேற்கு, தெக்கணப் பாய் ஸ்ரீ மஹாலிங்க சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 4 ஆம்திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன. எண்ணெய்க்காப்பு சாத்தல் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் எதிர்வரும் எதிர்வரும் 7 ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரைநடைபெறும்.(ஒ-28-202)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் கந்தபுராணம் என்னும் பொருளில் கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார்.

அதில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு 'இரணியன்வதம்' பற்றி உரை நிகழ்த்துவார். (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.1

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் 23ஆம் நாளான இன்று வியாழக்கிழமை வி. சிவஞான சேகரத்தின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

வயலின் எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் கே.கஜன், முகர்சிங் எஸ்.விமல் சங்கர் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர். (202)

* * *

யாழ்ப்பாணம்,செப்.1

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் 'தேரின்மகிமை' பற்றி நிகழ்த்தும் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு நல்லூர் [illegible] பெறவுள்ளது.


(204-202)



நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தின் 21 ஆம் நாளான நேற்று முன்தினம் தங்கரதத்தில் எம்பெருமான் வீதியுலா வந்த காட்சி.

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பகம்

இருபத்திமூன்றாம் நாள் திருவிழா



## அங்குபோவோம் வந்திடடி!



தேர்முட்டிப் படிமேலே -கிளியே!
செல்லப்ப னென்றசீமான்
ஆர்வமுடன் இருக்கிறான்டி - கிளியே!
அங்குபோவோம் வந்திடடி

*- யோகர் சுவாமிகள்.*

## கந்தனே சரணமைய்யா!

*கந்தனே கடம்பனே கார்த்திகேயனே நல்லையின்*
*- வாசனே*
*எந்தையே ஏரகத்துறைபவனே எம்துயர் தீர்த்தருள்*
*- புரிபவனே*
*பந்தபாசத் தீவினையகற்றி பக்தர்க் கருளும்*
*- பராபரனே சிவ*
*மைந்தனே வள்ளிக்கணவனே மயில்வாகனனே*
*- சரணம் சரணமையா*

சைவப்புலவர் ச.கந்த.சத்தியதாசன்.

## இல்லைத்தான் இனிமேல் துயரம்

சொல்லத்தான் இனிப்பான் முருகன்
இல்லைத்தான் இனிமேல் துயரம்
அள்ளித்தான் தருவான் ஆனந்தம்
வள்ளிதன்னுடனே வருவான் - சொல்லத்தான்

செல்லப்பா எனும் ஓர் முனிவன்
நல்லைவாவெனவே அழைத்தான்
சொல்லப்பாவெனவே சொன்னான்
செல்லப்பாகெனவே தந்தான் - சொல்லத்தான்

நல்லசிந்தனை அவன் செய்தான்
இல்லைப்பா இதுபோல் எங்கும்
கல்லைக் கனிந்துருகச் செய்யும்
நல்லைக் கந்தனவன் அருள் போலே - சொல்லத்தான்

ப.க.மகாதேவா.

## பணிவோம் நம்பி

ஆறுதலை யுடையான் ஆறுபொறி யாகி
ஆறுதலை யுடையான் வந்தான் - அவன்
ஆறுதலைக் கொடுத்து தேறுதலைப் பெருக்கி
அன்பர்தமக் கருள்தரப் பிந்தான்- கந்தன்
மீறுதலைத் தடுத்து ஊறுகளைத் தவிர்ப்பான்
வேலவனைப் பணிவோம் நம்பி - நிசம்
விடுதலை கொடுத்துக் கெடுதலைக் களைவான்
வேறுதலை யுடையான் தம்பி

*- வ.சின்னப்பா.*

## காத்திட வாரும் நல்லூரானே!

*வருவாய் வருவாய் வருவாய் முருகா*
*திருவே உருவாய் வருவாய் முருகா*
*முருகா முருகா வடிவேல் முருகா*
*இருளினை நீக்கிட வருவாய் முருகா*

*கருணையுளம் கொண்ட நல்லூரானே*
*கண்கண்ட தெய்வமே நல்லூரானே*
*எம்மைக் காத்திட வாரும் நல்லூரானே*
*நல்லூரானே நல்லூரானே நல்லூரானே!*

*- லீ.ஸ்கந்தா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 30 . 01 . 1964



உதிர்வு 12 . 09 . 2004

### இரத்தினசபாபதி இரத்தினானந்தன்

(ஆனந்தன்)

அன்பிற்கும் பாசத்திற்கும் ஆலமரமாய்
நீயிருந்தாய் அநாதையாய் எம்மைவிட்டு
சென்றாய் ஐயா ஓராண்டு சென்றாலும்
ஓயவில்லை உங்கள் நினைவலைகள்
ஓயாத அலையாய் எங்கள் இதயத்தில்
இன்றும் வந்து போகிறது

தகவல்:
குடும்பத்தினர்.
இ.மஞ்சுளா (மனைவி), பிள்ளைகள்.

கைத்தொழிற்பேட்டை,
சாவகச்சேரி. (39447)(42-15-34)


# புலிகளின் பெயரால் பணம் பறித்தோர் கொழும்பில் கைது!

யாழ்ப்பாணம்,செப்.1

தமிழீழ விடுதலைப் புலிகள் எனத் தம்மைக் கூறி வியாபாரிகளைப் பயமுறுத்திப் பணம் பெற்று வந்தவர்கள் பொலீஸாரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பு புறக்கோட்டை, செட்டியார் தெரு ஆகிய இடங்களில் இவர்கள் நீண்ட நாள்களாக செயற்பட்டு வந்துள்ளார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் குழுவின் தலைவராக முன்னாள் பொலீஸ்காரர் ஒருவரே செயற்பட்டார் என்றும் -

தமிழ் மற்றும் சிங்கள இளைஞர்கள் இந்தக் குழுவில் அங்கம் வகித்தனர் என்றும் - பொலீஸார் கூறினர். (ஒ-12)

## திருக்குறள் மனனப்போட்டி

வலிகாமம் கல்வி வலய திருக்குறள் மனனப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வலயத்திற்குட்பட்ட கோட்ட மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்ற மாணவர்கள் மேற்படி போட்டியில் பங்குபற்றுவார்கள். (ஒ-152-202)

## யோகாசனப் பயிற்சி

ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்றத்தினரால் நடத்தப்பட்டு வரும் அறநெறிப் பாடசாலையில் யோகாசனப் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகின்றது.

ஆண்கள், பெண்கள் இருபாலாரும் இந்த யோகாசனப் பயிற்சி வகுப்புகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டுவருவதாக அதன் ஆசிரியர் ந.கோணேஸ்வரன் தெரிவித்தார். (ஒ-152)

## கண்காட்சி

யாழ்.மனித முன்னேற்ற நிலையக் குழுக்களின் சுய வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் 'கைவினைத்திறன் வெளிப்பாட்டு' கண்காட்சி இன்று வியாழக்கிழமை யாழ். மனித முன்னேற்ற நிலையத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப.4 மணிவரை இடம்பெறவுள்ளது. கண்காட்சியில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-ரி)

## தமிழகத்திலிருந்து 13 அகதிகள் தாயகம் திரும்பினர்

மன்னார்,செப்.1

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய 13 ஈழத்தமிழர்கள் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டு மீனவர்களின் உதவியுடன் இவர்கள் நாடு திரும்பியுள்ளனர். தலைமன்னார் அருகே கடலில் உள்ள ஐந்தாம் மணல்திட்டில் இறக்கிவிடப்பட்ட இவர்களை அப்பகுதியால் ரோந்து சென்ற கடற்படையினர் கைது செய்த பின்னர் அவர்களை மன்னார் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். (ஒ)


## என்றும் உம் நினைவுகள் சுமப்போம்...



மணம் மகிழ...
1959.07.25
கணம் நெகிழ...
1989.08.29
திதி: திரயோதசி

திருமதி
### இரத்தினசிங்கம் சூரியமலர்
(மலர்/சூர்யா)
(சந்தை வீதி, காங்கேசன்துறை)

29.08.1989 அன்று அமரத்துவமடைந்த எம் குடும்பத்தலைவியின் ஆத்மசாந்தி வேண்டி இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம்நினைவுகளோடு:
கணவர்: இரத்தினசிங்கம்
மகன்கள்: விஜய், ரவி
மருமகள்: மீரா
மற்றும் உறவுகள்.

த.முகவரி: வீடியோ சூர்யா,
லக்சுமி சினிமா லேன்,
இணுவில் கிழக்கு.

இறைவா,
ஊமையின் கனவுக்கும் உருவம்
கொடுத்த நீ...
எம் ஆசைக்கு ஏன் அணை
போட்டாய்...?
வேளைவரும்போது சிறகடிக்க
ஆசைகொண்டோம்...
நேரம் வந்ததென்று
கூறு போட்டாயோ எம் குடும்ப வாழ்வை?
சிறகிழந்த பறவைகளாக...
துடுப்பிழந்த ஓடங்களாக...
எம்மை ஆக்கிப்பார்த்ததில்
உனக்கென்ன ஆனந்தமோ?
அம்மா என்று அழைத்துக்கூட
ஆண்டுகள் பதினாறுகடந்து விட்டன...
நெஞ்சுக் கூட்டுக்குள் இத்துன்பம்
நீறாய்த் தகிக்கிறது
நல்லைத்தேரன்று நானிலம்
மகிழ்ந்திருக்க...
அகலாத்துன்பத்தை எம்முள்
விதைத்தாயே...?
அம்மா அன்று எம்மைச்சுமந்தீர்
நாம் என்றும் உம் நினைவுகள்
சுமப்போம்...

(C/44862)(11-19-51)





சரவணபவன் சப்பைரதத்தில் வரும்
அழகைக்கான அடியவர்கள் வருக!
அப்பன் அருள்பெறுக!



## சொலெக்ஸ்

பல், மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடியினைப் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம். நவீனரக சண் கிளாஸ்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சங்குப் பற்களை அழகாகக் கட்டவும் மிதப்புப் பற்களை கிளிப் பொருத்தி இலகு முறையில் சீர் செய்து கொள்ளவும்.

516, ஆஸ்பத்திரி வீதி, (OPD முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்: பிரதான வீதி, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
T.P:0777 286029

(சி-44844)



## JAFFNA COLLEGE, VADDUKODDAI
### ADMISSION - 2006
### FOR GRADE 1 AN'D GRADE 6
### தரம் 1, தரம் 6 இற்கான அனுமதி - 2006

1.
அ) விண்ணப்பப் படிவங்களை 05.09.2005 முதல் 24.09.2005 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ) எக்காரணம் கொண்டும் 27.09.2005 இற்குப் பின்னர் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
ஈ) விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 30.09.2005. அத்திகதிக்குப் பின்னர் எமக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்,

3. தரம் 1 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் போட்டோஸ்ரட் பிரதியும் இணைக்கப்படல் வேண்டும்.

4. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒரு படிவத்திற்கான கட்டணம் 400/=

6. வயதெல்லைகள்:
அ) தரம் 1 இற்கான விண்ணப்பதாரி 01.02.2000 இற்கும் 31.01.2001 இற்கும் இடையில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்..
ஆ) தரம் 6 இற்கான விண்ணப்பதாரி 01.02.1995 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

7. தரம் 6 இற்கான பிரவேசப் பரீட்சை 22.10.2005 இல் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்.

(சி-44867)(25-15-34-42)



## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

### போட்டி நிபந்தனைகள்:

- ✓ போட்டியானது ஆண்/பெண் இரு பாலாருக்குமானதாகும்.
- ✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
- ✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
- ✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போட்டி
C/o உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :..................
2. விலாசம் :..................
3. பிறந்த திகதி :..................
4. தொலைபேசி இல :..................
5. தேசிய அ.அட்டை இல :..................
6. பால் :..................

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப்போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......... ..........
திகதி கையொப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் மீள்குடியமர அனுமதி கோரி மகஜர்

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் வீடுகளையுடைய மக்கள் தம்மை சொந்த வீடுகளில் குடியமர அனுமதிக்குமாறு அப்பகுதி இராணுவ அதிகாரியிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த மகஜரில் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் நூற்றுக்கணக்கானவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

இக்கோரிக்கையை இராணுவத் தலைமையுடன் பரிசீலித்து தகுந்த பதிலை அளிப்பதாக கொழும்புத்துறைப்பகுதி இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார். கடந்த 5வருடங்களுக்கு மேலாக கொழும்புத்துறை, எழிலூர் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்க்கை நடத்திவருகிறார்கள். (ஒ-30)

### அடிக்கடி இடமாற்றப்படாமல்

# நெடுந்தீவில் ஒரு வருட காலமாவது மருத்துவர் தொடர்ந்திருப்பது அவசியம்

## வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி கருத்து

குருநகர்,செப்.1

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரியும் மருத்துவர் குறைந்த பட்சம் ஒரு வருட காலமாவது தொடர்ந்து கடமை புரிய அனுமதிக்கப்படவேண்டியது அவசியமாகும். இவ்வாறு நெடுந்தீவு வைத்தியசாலையில் பொறுப்பு வைத்தியராகக் கடமைபுரிந்து வரும் டாக்டர் திஸ்ஸகுமார் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை வளப் பற்றாக்குறையுடன் இயங்கி வருகிறது. இங்கு கடமைபுரிவதற்கு நியமிக்கப்படும் தாதிகள் மற்றும் மருத்துவமாதுக்கள் இம்மாவட்ட வைத்தியசாலையில் தங்கியிருந்து தமது சேவையை வழங்குவதற்குரிய இருப்பிட வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். இந்த வைத்தியசாலையின் வைத்தியம் தொடர்பாக செயற்றிட்டங்களைத் தீட்டுவதற்கு முன்னர் இங்கு பொறுப்பு வைத்தியராக நியமிக்கப்படுபவரின் சேவைக் காலம் முடிவடைந்து விடுகிறது. எனவே, வைத்தியர் இப்பகுதியில் நோயை இனங்காணவும் சிறந்த சேவையை வழங்கவும் அவர் தொடர்ந்து குறைந்தது ஒரு வருட காலமாவது தங்கி நின்று சேவைபுரிய வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவை அலுவலகத்தால் இடமாற்றம் திட்டமிடப்படவேண்டும்.

இம்மாவட்ட வைத்தியசாலைக்கு தொலைபேசி இணைப்பை வழங்குமாறு இலங்கை ரெலிகொம் நிறுவனத்துக்கு விண்ணப்பித்து அதற்கான பணத்தைச் செலுத்தி பலமாதங்களாகிவிட்டன. ஆனால், அதற்கான இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லை. நோயாளர் பிரச்சினை தொடர்பாக வேறிடங்களுக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள முடியாமல் நெடுந்தீவில் இயங்கும் தனியார் தொலைபேசி நிலையங்களுக்குச் சென்று தொடர்பைப் பெற்றுக்கொள்ள பலமணி நேரம் காத்திருக்கவேண்டியுள்ளது - இவ்வாறு டாக்டர் திஸ்ஸகுமார் குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஒ-51)

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு மோட்டார் சைக்கிள்

அச்சுவேலி,செப்.1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களுக்கும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள "வழிகாட்டலும் ஆலோசனையும்" பாடத்துறை ஆசிரிய ஆலோசகர்களின் உத்தியோகபூர்வமான பாவனைக்கு மோட்டர் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான வைபவம் செப்ரெம்பர் 24ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (ஒ-11)

# காரைநகரில் இன்றும் நாளையும் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளதாக காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை காரைநகர் தோப்புக்காட்டிலிருந்து வலந்தலை வரையும் நாளை வெள்ளிக்கிழமை நீலங்காட்டிலிருந்து வலந்தலை வரையும் இரு கட்டங்களாக இந்த கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களைக் கட்டிவளர்க்குமாறு அவர் கேட்டுள்ளார். (ஒ-73)

# முன்னோடி இடதுசாரித் தலைவர் ரி.துரைசிங்கம் கனடாவில் காலமானார்

கொழும்பு,செப்.1

இலங்கையில் இடதுசாரி இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவரான ரி.துரைசிங்கம் தமது 94ஆவது வயதில் கனடாவில் ரொரன்ரோ நகரில் சில தினங்களுக்கு முன்னர் காலமானார்.

இந்தத் தகவலை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள ஓர் இரங்கல் அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

சிரேஷ்ட சட்டத்தரணியான துரைசிங்கம் கனடாவில் தமது பிள்ளைகளுடன் சேர்ந்து கொள்ள செல்லும்வரை ஜெல்ஸ்ரோப் சட்டத்துறை பணிகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் ஹன்டி பேரின்பநாயகம் முதலியவர்களுடன் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸில் ஆரம்பகாலத்தில் முழுமூச்சுடன் பணியாற்றியவர் அவர். 1930களில் சூரிமல் இயக்கத்தில் சேர்ந்து டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்க, டாக்டர் என்.எம்.பெரேரா, றொமின்ரட்ணம் போன்றவர்களுடன் இடதுசாரி இயக்கத்தில் பணிபுரிந்தார். 1935 ஆம் ஆண்டு சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டபோது அதில் சேர்ந்தார். கம்யூனிஸ்டுகள் சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்தபோது அவர்களுடன் வெளியேறி இலங்கைத் தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத்தின் பணிகளின் வெற்றிக்கு பெரும் பங்களிப்புகள் செய்தார்.

அவர் ஐக்கிய சோஷலிஸ கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

பல நூல்களின் ஆசிரியரான துரைசிங்கம் 'அரசியலும் எமது காலத்து, வாழ்வியலும்' என்ற தலைப்பிலான தமது நூலின் இரு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

அவரது ஈமக்கிரியைகள் நேற்று 31ஆம் திகதி றொரொன்ரோவில் நடைபெறவிருந்தன.(ப)

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவருக்கு உதவி நிதி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கான பயிற்சி நெறிகளில் பயின்ற மாணவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை முதல் வழங்கப்படவுள்ள இந்த உதவிக்கொடுப்பனவு இரண்டு பிரிவுகளிலும் குறிப்பிட்ட பாடநெறிகளைப் பயின்ற மாணவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளதாக தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார்.

முதல் பிரிவில், கட்டட நிர்மாணம், மரவேலை, நீர்க்குழாய் பொருத்துதல், மின்ஒட்டு வேலை ஆகிய பாடநெறிகளைப் பயின்ற மாணவர்களுக்கும் -

இரண்டாவது பிரிவில் கட்டட நிர்மாணம், மின்ஒட்டுவேலை ஆகிய பாடநெறிகளைப் பயின்ற மாணவர்களுக்கும் இக்கொடுப்பனவு வழங்க ஏற்பாடாகியுள்ளது.

இக்கொடுப்பனவைப் பெறவுள்ள மாணவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் அன்றையதினம் காலை 10 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரிக்கு நேரில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-12)

# 'சுடர் ஒளி' அலுவலகம் மீது தாக்குதல்

## பிரதமர் மஹிந்த கண்டனம்

'சுடர் ஒளி' தலைமை அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

கடந்த திங்கட்கிழமை மாலை 'சுடர் ஒளி' அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஊடக சுதந்திரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே கருத வேண்டியுள்ளது என்று பிரதமர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலீஸ்மா அதிபரைக் கேட்டுள்ளதாகவும் பிரதமர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உடன் நடவடிக்கை தேவை

### ஐ.தே.கட்சி வலியுறுத்து

'சுடர் ஒளி' பத்திரிகை அலுவலகத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலுக்கு ஜே.வி.பியினரே பதில் கூறவேண்டும். ஊடகம் மீதான இந்த அநாகரீகமான தாக்குதலை ஐக்கிய தேசியக்கட்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் சந்தேகநபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதோடு ஊடகங்கள் மீதான பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

-இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமகுமார நாணயக்கார.

அவர் மேலும் கூறியதாவது:-

'சுடர் ஒளி' பத்திரிகைமீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலானது சுதந்திர ஊடகத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தலாகும். இந்த மாதத்திற்குள் இரண்டு தடவைகள் ஜே.வி.பியினர் 'சுடர் ஒளி' மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பலதடவைகள் தாக்கமுற்பட்டுள்ளனர். மேடை களிலும் 'சுடர் ஒளி'யை விமர்சித்தும் வருகின்றனர்.

இந்த நிலையில், நடத்திய தாக்குதலையும் ஜே.வி.பி.தான் செய்திருக்குமோ என்ற சந்தேகம் எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளது. இத்தாக்குதலுக்கு ஜே.வி.பியினரே பொறுப்புக்கூற வேண்டும்.

இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இதுவரை 'சுடர் ஒளி' மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அரசு இவ்வாறு கண்டனங்களை மட்டுமே தெரிவித்துள்ளது. அது தவிர இத்தாக்குதல்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்தான் என்ன? ஊடகங்களுக்குப் பாதுகாப்பு வழங்க ஏதேனும் நடவடிக்கைகளை அரசு எடுத்ததா? ஊடகங்கள் மீதான தாக்குதலின் ஆரம்பத்திலேயே உரிய நடவடிக்கைகளை எடுத்து பாதுகாப்பை வழங்கியிருந்தால் நிலைமை இந்தளவு மோசமாகியிருக்காது.

## அராஜகத்தின் உச்சக்கட்டம்!

### மலையக மக்கள் முன்னணி

'சுடர் ஒளி' பத்திரிகைக் காரியாலயத்தின் மீது கைக்குண்டு வீசப்பட்டதை அராஜகத்தின் உச்சக்கட்டமாகவே மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது -என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மக்களின் உணர்வுகளை துணிவோடு வெளியிடும் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள பகிரங்க சவாலாகவே இதனை நாம் கருதமுடியும்.

நேர்மையான நீதியான விசாரணை நடைபெறும் என அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற தாக்குதலுக்கான சூத்திரதாரிகளை அரசு தேடிப்பிடிக்கத் தவறுமானால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மீதே மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவார்கள்.

ஊடகவியலாளர்கள் உண்மை நடப்புகளை சுதந்திரமாக எடுத்துக் கூறுகின்ற நிலையைத் தடுப்பதற்கு தீய சக்திகள் களத்தில் இறங்கியிருக்கின்றன. ஊடகங்களுக்கே இந்த நிலை என்றால் சாதாரண பிரஜைகளின் கருத்துகள் எந்தளவிற்கு மதிக்கப்படும் என்பது இதன் மூலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த வங்குரோத்துத்தனமான, கோழைத்தனமான செயல்களை மலையக மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிப்பதோடு, அரசு உடனடியாக நேர்மையாக செயற்பட்டால் மட்டுமே எமது நாட்டில் ஜனநாயகத்தை உயிரோடு வைத்திருக்க முடியும் எனவும் அரசை எச்சரிக்கிறது - என்றுள்ளது.

## ஜனநாயகத்துக்குச் சவால்

### இ.தொ.கா. கண்டனம்

'சுடர் ஒளி' பத்திரிகை மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் உயரிய ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்

– இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். அக்கட்சியின் சார்பில் அதன் பிரதித் தலைவர், எம்.எஸ்.செல்லச்சாமி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'சுடர் ஒளி' பத்திரிகைக் காரியாலயத்தின் மீது விஷமிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ் ஊடகவியலாளர்களைத் தாக்கியும், கொலை செய்தும் மிலேச்சத்தனம் புரியும் சக்திகள் தற்போது ஊடக அலுவலர்கங்கள் மீது குண்டு வீசுவதையும் தாக்குதல் நடத்துவதையும் அங்கீகரிக்கமுடியாது.

தாக்குதல்கள் மூலம் ஊடகச் சுதந்திரத்துக்கு ஊறுவிளைவிப்பவர்கள் பிறரின் கருத்துகளுக்கும் ஊறு விளைவிப்பவர்களே. அடிப்படை உரிமைகளுக்கும் ஊறு விளைவிப்பவர்களாகவே இவர்களைக் கொள்ளவேண்டும். இத்தகைய தாக்குதல்கள் உயரிய ஜனநாயகத்துக்கு விடுக்கப்படும் சவாலாகும்.

இரண்டாம் முறையாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின் சூத்திரதாரிகள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதுவே ஊடகச் சமூகத்தின் ஒரே கோரிக்கையாகும் – என்றும் செல்லச்சாமி மேலும் கூறியுள்ளார்.

## பயங்கரவாதத்தின் உச்சம்

### முஸ்லிம் காங்கிரஸ் சாட்டை

'சுடர்ஒளி' பத்திரிகையின் அலுவலகத்தின் மீதும், ஊடகவியலாளர் மீதும் தாக்குதல் நடத்தியமை, 'ஊடகங்களுக்கு எதிரான பயங்கரவாதத்தின் உச்சக்கட்டத்தின்' ஓர் அங்கமாகும். 'சுடர்ஒளி' தலைமையகத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தியிருப்பது குறித்து கடும் அதிர்ச்சியும், கவலையும் கொண்டுள்ளது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். இவ்வாறு அக்கட்சி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலைமையில் நிகழ்கின்றமையையும், இதே சட்டத்தின் மூலம் இத்தகைய செயல்களுக்குக் காரணமானவர்களைத் தடுக்கவோ, கைது செய்யவோ முடியாதிருப்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

தேர்தல் காலம் மிகநெருங்கிவரும் இவ்வேளையில், கருத்துச் சுதந்திரத்துக்குத் தடைபோடும் வகையிலான செயற்பாடுகள் இனிமேலும் தொடராவண்ணம், இத்தகைய செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிரான கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அரசின் தார்மீகக் கடமையாகும் என்பதை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மேலும் வலியுறுத்திக் கூறுகின்றது - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப, கணவனை இழந்த, அழகிய 30வயதுப் பட்டதாரி ஆசிரியருக்கு மணமகன் தேவை. தாரமிழந்தவர்கள் முழுவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல.2689, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (39457)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1974 கார்த்திகை இடபராசி, கிரகபாவம் 26, உயரம் 5'4'', B.A. (புவியியல்) இலங்கை நிர்வாக சேவை A.G.A மணமகனுக்கும் 1977 அச்சுவினி மேடராசி, கிரகபாவம் 14 ½, உயரம் 5'3'', B.Sc. (Civil Engineer) மணமகளுக்கும் ராக்டர், எஞ்சினியர், எக்கவுண்டர், விரிவுரையாளர் மணமகன் தேவை. தொடர்பு: 'சிவாலயா' நல்லூர். T.P.: 021 222 7844. (39494)

## மணமகன்கள் தேவை

1979 பூரம் சிங்கராசி, உயரம் 5', கிரகபாவம் 88, M.B.B.S (இறுதி ஆண்டு) மணப்பெண்ணுக்கு டாக்டர், எஞ்சினியர் மணமகனும் 1965 உத்தரம் கன்னிராசி, உயரம் 5'3'', கிரகபாவம் 23¾, B.Sc MBL BIO, BSC (Hons) Mphil விரிவுரையாளர் மணமகளுக்குபட்டதாரி, ஆசிரியர், அரச பணியில் இருக்கும் மணமகன்கள் தேவை.தொடர்பு: 'சிவாலயா' 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021-222 7844. (39493)

## காணவில்லை

கோண்டாவில், புகையிரத வீதியைச் சேர்ந்த சிவசம்பு என்பவருடைய கன்று ஈன்ற வளர்ப்புப் பசுமாடு (மெல்லிய சிவப்பு வெள்ளை நிறம்) காணாமற் போய்விட்டது. தயவுசெய்து கண்டவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (39486)

## அராலியூர் சுந்தரம் பிள்ளையின் நூல்கள்

1. ''சிறுகதை எழுதுவது எப்படி?'' எல்லா மாணவர்களிற்கும் வேண்டிய நூல். 2. ''இமயம்'' இந்த நாட்டில் நடந்த சம்பவங்களைச் சித்திரிக்கும் பதினொரு நவீன நாடகங்கள். 3. ''வானொலி நாடகம் எழுதுவது எப்படி?'' ரூ.150. (39249)

## சாரதி தேவை

மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் செலுத்தக்கூடிய (30-40வயது) வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய சாரதி தேவை. சகல ஆவணங்களுடன் நேரில் வரவும்.

தொடர்பு: யோகாஸ் புடைவையகம்
(C/44870) (ஞானம்ஸ் புடைவையகம்)(21.45.34)
17A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.:No. 5679

**இவ்வருடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலவச ஆங்கில டிப்ளோமாவுக்கான**

முதலாவது நேரடிவகுப்பில் கலந்து கொள்ளத்தவறியோர்களுக்கான

## நேரடி வகுப்பு

SAAMSTECH இன் இலவசத் தொலைக்கல்விப்பாடநெறிக்கு விண்ணப்பித்தோருக்கான முதலாவது நேரடி வகுப்பில் கலந்து கொள்ளத் தவறியோருக்கான நேரடி வகுப்பு வரும் 10.09.2005 சனிக்கிழமை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து இப்பாடநெறியினை மேற்கொள்வோருக்கு 60 அலகுகள் கொண்ட பாடநெறி, நேரடிவகுப்புக்கள், பரீட்சை, சான்றிதழ் என்பன முற்றிலும் இலவசம்.

**இந்த 2 மணிநேர இலவச வகுப்பு மூலமாக கதைத்தலுக்கான முழுமையான அடித்தளம் விருத்திசெய்யப்படுகிறது.**

**இடம : யாழ் மத்திய கல்லூரி**

**காலம : 10.09.2005 (சனிக்கிழமை)**

**நேரம் : 9.00-11.00,11.00-1.00,2.00-4.00,4.00-6.00**

(விரும்பிய ஒரு நேரத்தில் கலந்து கொள்ளலாம்.)

புதிதாகச்சேருவோரும் இந்த நேரடிவகுப்பில் கலந்து கொண்டு அலகுகளைப்பெறலாம்.

வகுப்பு பற்றிய மேலதிக விவரங்களுக்கு : 021 - 4591571

குறிப்பு: 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் நேரடிவகுப்புக்கள் ஒவ்வொரு மாதமும் போயாதினங்களில் நடைபெறும்.

**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna**

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**மகேசன் சிவானந்தம்**

(ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோப்ரேசன் -ஓய்வுபெற்ற கணக்காளர்)

எமது தர்மகர்த்தாக்கள் சபையின் பொருளாளராகப் பலவருட காலங்கள் செயலாற்றி அளப்பரிய சேவைகளைச் செய்த மகேசன் சிவானந்தம் அவர்களது பிரிவை அறிந்து ஆற்றொணாத் துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

வதிரி,
கரவெட்டி.

தர்மகர்த்தாக்கள் சபை
ஸ்ரீபரமானந்த சிறார் முதியோர் இல்ல
ஆச்சிரமம்.

## பண்ணைப்பாலத்தை திருத்தும் பணி விரைவில் ஆரம்பம்

குருநகர், செப்.1

பழுதடைந்த நிலையில் உள்ள பண்ணைப் பாலத்தைத் திருத்தியமைக்கும் ஆரம்ப கட்ட வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைப்பதற்கென இரும்புச் சட்டங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் எடுத்துவரப்பட்டு பண்ணைப் பாலத்தின் நுழைவாயிலிலுள்ள பழைய பண்ணை மீன்சந்தையின் அருகில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-51)

## புனித நகருக்கு மின்சாரவசதி

வடமராட்சி, செப்.1

பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகரில் குடியமர்ந்துள்ள சுகாதாரத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் மூலம் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இங்குள்ள 48 வீடுகளுக்கும் தலா ஒரு சூரிய மின்கலமும் இரண்டு மின்குமிழ்களும் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் சர்வோதய அமைப்பும் இணைந்து இப்பணியை மேற்கொண்டுள்ளன. (ஓ-173)

## கோண்டாவிலில் சுகாதாரச் சோதனை

கோண்டாவில்,செப்.1

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த வாரம் கோண்டாவில், கொக்குவில் பகுதியில் உள்ள உணவகங்கள், பலசரக்குக் கடைகள் ஆகியவற்றில் திடீர் பரிசோதனை மேற்கொண்டனர்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவு மற்றும் பல பொருள்களின் காலாவதியாகும் திகதிகள் இவர்களால் பரிசோதிக்கப்பட்டு, கலாவதியான பொருள்கள் அழிக்கப்பட்டன. (ஓ-49)

## தெல்லிப்பழை கல்விக்கோட்ட அதிபர்களுக்கு!

தெல்லிப்பழை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான பாடசாலைகளின் நூல் தேவைகள் சம்பந்தமாக ஆராயப்படவுள்ளமையால் அடுத்தாண்டுக்கு வேண்டிய பாடநூல்களின் விவரங்களுடன் பாட நூல்களுக்குப் பொறுப்பான ஆசிரியரையும் அழைத்துவரும் படி அதிபர்களை தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கேட்டுள்ளார். (ஓ-86)

# 'தார்' வாங்க நிதிநெருக்கடி

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.குடா நாட்டில் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான 'தார்' கொள்வனவுக்கு நிதிப் பற்றாக்குறை பிரச்சினையாக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

'தார்' கொள்வனவு செய்வதற்குரிய நிதியை உரிய காலத்தில் அரசு வழங்காமையே காரணம் என்றும்-

இதனால், வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்புப் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும்- கூறப்படுகின்றது.

ஆழிப்பேரலையால் பாதிப்படைந்துள்ள வீதிகளின் புனரமைப்புப் பணிகள் நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட தாமதத்தினால் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. (ஓ-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**சின்னத்தம்பி அருச்சுனன்**

தோற்றம்
25-11-1928

மறைவு
29-07-2005

அன்புமிகு தந்தையே ஆருயிர் மாமாவே
எம்மருமைத் தாத்தாவே எல்லார்க்கும் எல்லாமாய்
இருந்த எம் குலவிளக்கே செழுமையுடன்
நாம்வாழ சீர்வழி செய்தவரே ஆண்டவர்
படைப்பினிலே அரும்படைப்பே உம்பிறப்பு
பெருமிதமாய் நாம் கூற உறவெல்லாம்
மெய்சிலிர்க்க உம் படைப்பு சிறப்பு மிக்க
தென்றறிந்த அந்த இறைவனும் அவசர
மாய் தம்மன்றை அழைத்துச் சென்றாரோ?
ஆறவும் முடியலையே...
உம் ஆத்மா சாந்தியடைய எம்நேச
தேவனை துதிக்கின்றோம்.

75, பருத்தித்துறை றோட்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(39492)
(214534)

நவரத்தினம், பூமணி, புஷ்பமலர், ஜெயந்தினி
(பிள்ளைகள்)
குமுதினி, யோகநாதன், மருதலிங்கம்,
விஷ்ணுதாசன் (மருமக்கள்), பேரப்பிள்ளைகள்.

## இருபத்தி ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17
07
1913

மறைவு
20
08
1979

அமரர்

**கார்த்திகேசு வைத்தியலிங்கம்**

(உரிமையாளர்: வைத்தியலிங்கம் மரக்காலை. யாழ்ப்பாணம்.)

தருமத்தின் வழியில் வாழ்ந்த
தந்தையே வைத்தியலிங்கம்
பெருமைசேர் பெயர் படைத்த
பெருமானே உன்னைப் பிரிந்து
இருபத்தி ஆறு ஆண்டுகள் சென்றும்
எம் மனத்தை அகலாது உள்ளாய்
திரயோதசி திதியில் உன்னை
சிந்தித்துப் பூசிக்கின்றோம்.

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்:

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(39480)(51-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள், குழந்தைகள் கடத்தல் அதிகரிப்பு

பீஜிங், செப்.1

'பாலியல்' தொழிலில் ஈடுபடுத்துவதற்காக குழந்தைகள், பெண்களை கடத்திச் செல்வது உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது' என ஐக்கிய நாடுகள் சபை ஆய்வில் தெரியவந்துள்ளது.

சீனாவின் பீஜிங் நகரில் 'ஆசிய - பசிபிக் மனித உரிமைகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. அங்கு மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவர் லூயிஸ் ஆர்பர் தெரிவித்ததாவது:-

'ஆசிய - பசிபிக் பகுதியில் குறிப்பாக தெற்காசியாவில் செக்ஸ் தொழிலுக்காக கடத்தப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மியான்மர், கம்போடியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து கடத்தப்படும் குழந்தைகள், பெண்கள் ஆஸ்திரேலியா, ஜப்பான், தென்னாபிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு கடத்திச்செல்லப்பட்டு அங்கு விபச்சார விடுதிகளில் அடிமைகளாக வைக்கப்படுகின்றனர்' என்றார். (8)

உலக அரங்கில்

## விமானத் தாக்குதலில் 56 பேர் பலி!

பாக்தாத், செப்.1

ஈராக்கில் அல்-ஹெய்டா தீவிரவாதிகள் பதுங்கியுள்ள இடங்கள் மீது அமெரிக்க விமானப்படைகள் தாக்குதல் நடத்தியதில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே சிரியா நாட்டு எல்லைக்கு அருகே உள்ள கரபில்லா என்ற இடத்தில் அல்-ஹெய்டா ஆதரவுபெற்ற தீவிரவாதி அபு இஸ்லாம் மற்றும் அவனது கூட்டாளிகள் பதுங்கியிருந்ததை கண்டுபிடித்த அமெரிக்கப் படையினர் அங்கு விமானத் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

மூன்றுமுறை நடந்த விமானத் தாக்குதலில் எட்டு குண்டுகள் வீசப்பட்டதாகவும் இந்த தாக்குதலில் அபு இஸ்லாம் மற்றும் அவனது கூட்டாளிகள் 55 பேர் கொல்லப்பட்டதாகவும் அமெரிக்க படையினர் தெரிவித்துள்ள னர். (8)

# சன நெரிசலில் சிக்கி, நதியில் மூழ்கி ஈராக்கில் 630 யாத்திரிகர் உயிரிழப்பு!

## வதந்தியால் நேர்ந்த விபரீதம்

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் உள்ள வழிபாட்டுத் தலத்தின் மீது தாக்குதல் நடத்த மனித வெடிகுண்டு ஊடுருவியிருப்பதாகப் பரவிய வதந்தியையடுத்து அங்கிருந்த பாலத்தின் வழியே வெளியேற முயன்ற 630 யாத்திரிகர்கள் நெரிசலில் சிக்கியும் நதியில் மூழ்கியும் உயிரிழந்தனர்.

பாக்தாத்தில் கஸிமியா மாவட்டத்திலுள்ள இமாம் மௌசா அல்காதிம் வழிபாட்டுத் தலத்தில் ஷியா பிரிவு மதகுரு இமாம் மூஸா காசிமின் வருடாந்த நினைவு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 10 லட்சத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் பங்கேற்றனர். இப்பகுதியை நோக்கி தீவிரவாதிகள் ஏவுகணைகளை வீசினர். பீரங்கிகளாலும் சுட்டனர். இந்தத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்; 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நடந்த இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு வழிபாட்டுத் தலத்தில் கூடியிருந்த யாத்திரிகர்களிடையே மனித வெடிகுண்டுகள் ஊடுருவியுள்ளன வதந்தி பரவியது.

இதனால், பீதியடைந்த யாத்திரிகர்கள் முண்டியத்துக் கொண்டு ஒரே நேரத்தில அங்கிருந்த டைகிரீஸ் நதி பாலத்தின் வழியே வெளியேற முயன்றனர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்தனர். மேலும் பாலம் இடிந்து விழுந்ததால் ஏராளமானோர் டைகீரிஸ் நதியில் மூழ்கிப் பலியாகினர். (ஒ)



பாலத்தில் சன நெரிசல்

# ஐந்து ஆண்டுகளுக்கு 8 கோடி வீதத்தில் இந்தியாவின் சனத்தொகை அதிகரிப்பு!

இந்தியாவில் மக்கள்தொகை இப்போது ஐந்தாண்டுக்கு எட்டு கோடி என்ற அளவில் அதிகரித்தபடி உள்ளது. இதே வேகத்தில் சென்றால், 2026ஆம் ஆண்டில் மக்கள் தொகை 141 கோடியாக உயரும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் தகவலை, மத்திய அரசின் மக்கள் தொகை பதிவுத்துறை வெளியிட்டுள்ளது.

இந்திய பதிவுத்துறை தலைமை இயக்குனர் தலைமையிலான தொழில்நுட்பப் பிரிவு, சமீபத்தில் மக்கள் தொகை பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் மக்கள்தொகை இப்போது தொடர்ந்து ஒரே அளவில் பெருகியபடி உள்ளது. ஐந்தாண்டுக்கு எட்டுகோடி என்ற அளவில் பெருகிவருகிறது. இது இந்த நூற்றாண்டின் அரை நூற்றாண்டுவரை நீடிக்கும். இதே நிலை நீடித்தால், 2026ஆம் ஆண் டில் இந்தியாவின் மக்கள்தொகை 141 கோடியாக இருக்கும். எனினும் அரை நூற்றாண்டுக்கு பின்னர், இந்த நிலையில் மாற்றம் வரும். ஐந்தாண்டுக்கு ஏற்படும் எட்டுகோடி மக்கள் தொகை உயர்வில் ஒரு கோடி குறையும்.

மக்கள்தொகை எப்படி இருக்கும் என்ற ஒரு மதிப்பீட்டு ஆய்வு எடுக்கப்பட்டது. கடந்த 2001ஆம் ஆண்டு முதல் 2026ஆம் ஆண்டு வரை ஆராயப்பட்டது. கடந்த 2001ஆம் ஆண்டு முதல் எடுக்கப்பட்ட ஆய்வின் படி பார்த்தால், மக்கள்தொகை உயர்வில் மாற்றம் இருக்காது.

இப்போது நூறு கோடியைத் தாண்டிவிட்ட மக்கள்தொகை, அடுத்தாண்டு 111.4 கோடியாக இருக்கும். 2011ஆம் ஆண்டில் 119.7 கோடியாக இருக்கும். 2016ஆம் ஆண்டில் 127.5 கோடியாக இருக்கும். 2021ஆம் ஆண்டில் 134.7 கோடியாக இருக்கும். 2026ஆம் ஆண்டில் 141.1 கோடியாக உயர்ந்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (8)

# இறுதிப் போர் ஒன்று ஏற்படும்போது மக்களெல்லாம் புலிகளாக மாறவேண்டும்!

## வடமராட்சி கிழக்கில் கேணல் சூசை உரை



இறுதிக்கட்டப் போர் ஒன்று ஏற்படும்போது மக்களெல்லாம் விடுதலைப் புலிகளாக மாறி போரை முன்னெடுப்பதில் முனைப்புடன்செயற்படவேண்டும். அந்த வகையில் எமது தலைவரின் சிந்தனையில் வெளிவந்த செயற்பாடுதான் மக்களுக்கான இந்தத் தற்காப்புப் பயிற்சி. இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை.

கடந்த 29 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் நடைபெற்ற லெப்.கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்து வெளியேறிய துணைப்படை வீரர்களின் பயிற்சி நிறைவு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான காலத்தில் நாம் எந்தவொரு விமோசனங்களையும் பெறவில்லை. மாறாக எமது அமைப்பைச் சேர்ந்த 80 போராளிகளை நாம் இழந்துள்ளோம். இனியும் பொறுமை காக்க முடியாது. எமது தலைவர் தூரநோக்குடனும் நுட்பமான சிந்தனையுடனும் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

சிறிலங்கா அரசின் கொடுமைகளுக்கு எதிராகப் போராடத் தொடங்கவேண்டுமென தலைவருக்கு வேண்டுகோள்விடுத்த மக்கள் தாமே முன்வந்து போர்ப் பயிற்சிகளைப் பெறுகின்றனர் - என்றார்.

வடமராட்சி கிழக்கில் நான்கு பாசறைகளில் தமிழீழ கடற்படை துணைப்படைப் பயிற்சிகளைப் பொதுமக்கள் பெற்றுவருகின்றனர். ஏற்கனவே 100பேர் கொண்ட அணி துணைப்படைப் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளது. மேலுமொரு 100 பேரைக் கொண்ட அணி பயிற்சி பெற்றுவருகின்றது. (8)

## முல்லைத்தீவிலும் எழுச்சி நிகழ்வு நடத்த ஏற்பாடு

ஒட்டுசுட்டான், செப்.1

தமிழர் தேசியப் பிரகடனத்தை வலியுறுத்தும் மக்கள் எழுச்சி நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும் எடுப்பில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பரவலாக நடத்தப்படவுள்ளன.

வவுனியாப் பிரகடனத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் நடத்தப்படவுள்ள இந்த எழுச்சி நிகழ்விற்கு முன்னோடிக் கலந்துரையாடல்கள் பிரதேச செயலக பிரிவுகளில் நடத்தப்பட்டுள்ளன.

# மாணவருக்கு உணவு வழங்கல் தொடர்பான செயலமர்வுகள்

வட்டக்கச்சி, செப்.1

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான உணவு வழங்கல் செயற்றிட்டம் தொடர்பான அறிமுகச் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன. இச்செயற்றிட்டம் மூன்றாம் தவணையில் இருந்து செயற்படுத்தப்படவுள்ளது.

கரைச்சிக் கோட்டத்தில் உள்ள 36 பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அப்பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களுக்கும் பிரதான சமையலாளருக்குமான இச்செயலமர்வுகள் அந்தந்தப் பிரதேசங்களில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி வட்டக்கச்சி மகா வித்தியாலயத்திலும் 16 ஆம் திகதி அக்கராயன் மகா வித்தியாலயத்திலும் 19 ஆம் திகதி கிளிநொச்சி இந்துக் கல்லூரியிலும் 20 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் இச்செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளை, கண்டாவளை, பூநகரி ஆகிய கோட்டங்களில் இச்செயற்றிட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. (ஒ-405)

# குளங்களில் முதலைகள் அதிகரிப்பு

வட்டக்கச்சியிலுள்ள குஞ்சுமீசான் குளத்தில் முதலைகள் காணப்படுகின்றன. குளத்தில் தற்போது தண்ணீர் குறைவாக இருப்பதால் குளத்தில் இருந்து வெளியேவரும் முதலைகள் அப் பகுதியில் நடமாடும் கால்நடைகளைப் பிடித்து வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று பன்னங்கண்டி ஆற்றுப் பகுதியில் பண்றிமோட்டைக் கிராமத்தில் வில்லூன்றி ஆற்றிலும் முதலைகள் அதிகரித்துள்ளன. வில்லூன்றி ஆற்றில் நன்னீர் வற்றாமல் இருப்பதால் முதலைகள் பெருக வாய்ப்பாக உள்ளது.

அந்த முதலைகளின் பெருக்கத்தினால் வில்லூன்றி ஆற்றில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இப் பகுதியில் ஆறுகள், குளங்களிலுள்ள முதலைகளை முன்பு தென்னிலங்கையில் இருந்து வந்த சிலர் பிடித்து தோல் தேவைக்காகவும் இறைச்சித் தேவைக்காகவும் பயன் படுத்தி வந்தனர். தற்போது முதலைகளை எவரும்பிடிப்பதில்லை. (ஒ - 352)






# இயற்கை அனர்த்தம் குறித்து முல்லைத்தீவில் கருத்தரங்குகள்

புதுக்குடியிருப்பு, செப்.1

ஆழிப்பேரலை உட்பட இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் முல்லைத்தீவு மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களில் நடைபெற்றுவருகின்றன.

சொலிடர் என்ற அமைப்பு நோர்வே மக்கள் உதவித் திட்டத்தின் கீழ் இக்கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

இடைத்தங்கல் முகாம்கள், பாடசாலைகள், பொதுநிறுவனங்கள் என்பனவற்றின் ஊடாக இந்த விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

வெளிநாடுகளில் நடைபெற்ற ஆழிப்பேரலை மற்றும் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய விளக்கப்படங்கள் காண்பிக்கப்பட்டன. அத்துடன், இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான விளக்கம் அப்போது வழங்கப்பட்டது. (ஒ-353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

01) எதிர்வரும் 02.09.2005 ஆம் திகதி வெள்ளிக் கிழமை நல்லூர்க் கந்தன்இரதோற்சவத்தை முன் னிட்டு மணல்விநியோகம் நடைபெறமாட்டாது. அன்றைய திகதியிடப்பட்டவர்களுக்கு 03.09.2005 சனிக்கிழமை மணல் விநியோகம் நடைபெறும்.

02) 03.09.2005 சனிக்கிழமை உலகவங்கி வீட்டுத் திட்டத்திற்கு மணல் விநியோகம் நடைபெறமாட்டாது.

மணல் விநியோகப்பகுதி,
உபயகதிர்காமம். நிர்வாகம்.

(சி.44878) (39-45-19)


## பொறியியலாளர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்.கட்டடத் திணைக்களத்தில் பொறியிய லாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க முடியாதுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பத்து பொறியியலாளர்கள் பணியாற்ற வேண்டிய போதும் பிரதம பொறியியலாளர் மட்டுமே சிலகாலம் பணியாற்றி வந்தார் என்றும் -

தற்போது யாழ்.அரச அதிபரினால் யாழ். செயலகத்தில் பணிபுரிந்த பொறியியலாளர் ஒருவர் கட்டடத்திணைக்களத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார் என்றும் - கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி என வடபிராந்தியம் முழுவதும் தமது செயற் பாடுகளை விரிவுபடுத்தியுள்ளமையினால் பணியை திறமையாகவும் துரிதமாகவும் செயற்படுத்துவற்கு பொறியியலாளர்கள் பற்றாக்குறை பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்துவதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஓ-ரி)


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை வீரசிங்கம்



தாவடி வடக்கு, தூபியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை வீரசிங்கம் (சின்னத்தம்பி) அவர்கள் நேற்று (31.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கண்மணி அவர்களின் அன்புக் கணவரும் அருணகிரிநாதன் (ஜேர்மன்), இராமச் சந்திரன் (சுவிஸ்), கணேசலிங்கம், பத்மினிதேவி (சுவிஸ்), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கமலாதேவி (ஜேர்மன்), தேவகி (சுவிஸ்), சுந்தரலிங் கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2005) வியாழக் கிழமை ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரி யைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி வடக்கு,
தர்மலிங்கம் தூபியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சுந்தரலிங்கம் (மருமகன்).
(39501) (39-45-19)


### வயோதிபரிடம் பொதி அபகரிப்பு

ஊர்காவற்றுறை,செப்.1

தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வயோதிபர் ஒருவர் கையில் கொண்டு சென்ற பொதியைப் பறித்துக் கொண்டு தலைமறைவாகினர்.

இச்சம்பவம் சமீபத்தில் மதியம் 11 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதியிலிருந்து யாழ். பஸ்நிலையம் நோக்கிச் செல்லும் வீதியில் இடம்பெற்றது.

எழுவைதீவில் வசிக்கும் எஸ். கதிரவேலு (வயது 55) என்பவரே இவ்வாறு தனது பொதியை பறிகொடுத்தவராவர்.

(ஓ-16)


## JRS தொழில் பயிற்சி நிறுவனம்
கச்சாய் வீதி, சாவகச்சேரி

பெண்களுக்கான வாழ்வியல் பயிற்சி

தையல், பூவேலை, ஐசிங், சிகைஅலங் கரிப்பு, பன்னவேலை, வர்ணவேலை போன்ற பயிற்சிகளோடு , உளவியல், ஆங்கிலம், தலைமைத்துவப் பயிற்சி என்பனவும் வழங்கப் படும்.

காலம்: ஆறு மாதங்கள் வாரநாள்களில் காலை 9.30 - பி.ப. 3 மணிவரை நடை பெறும்.

* பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
* சுயவிவரம் அடங்கிய விண்ணப்பங்களை 10-09-2005 இற்கு முன் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

புனித லிகோரியார் ஆலயம்
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(39497)(39-19-45)



## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் m9,m8 ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே குறிப்பிட்ட வேலைகளுக்கெதிரேயுள்ள வைப்புப் பணத்தினையும் படிவக் கட்டணத்தினையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப் படிவம் வழங்கல் 01.09.2005- 14.09.2005 பி.ப 2மணி வரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளல்: 15.09.2005 நண்பகல் 12 மணி வரை
3. கேள்வி திறத்தல்:15.09.2005 பி.ப 2 மணி
4. கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபால் மூலமும் 2 ஆவது பிரதியை பி.உ.உ.ஆணையாளர், யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கும் அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | இக்ராட் பதிவுத் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் வற் வரி உட்பட |
|---|---|---|---|
| 1. ஊறணி ஊற்றுக்கேணி திருத்தம் | m 9 | 2000.00 | 287.50 |
| 2. ஆதிகோயில் கடற்கரை வீதித் திருத்தம் | m 9 | 8500.00 | 575.00 |
| 3.காட்டுவளவு கடற்கரை வீதித் திருத்தம் | m 8 | 11600.00 | 575.00 |

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
2005.08.30. [சி-44872] (39-45-19)

நா.தம்பிராஜா
செயலாளர்,
நகராட்சிமன்றம்,வல்வெட்டித்துறை.



# DSI ரயர் மற்றும் ரியூப்
## விற்பனை விலைபட்டியல் 2005. 09. 01 முதல்

### சைக்கிள் ரயர்

| மாதிரி | | விலை ரூ. |
|---|---|---|
| STANDARD NORMAL | 28" x 1 1/2" | 283.00 |
| HEAVY DUTY Y/L | 28" x 1 1/2" | 296.00 |
| STANDARD SCHOOL MATE | 28" x 1 1/2" | 233.00 |
| STANDARD NO FLAT | 28" x 1 1/2" | 296.00 |
| STANDARD NO PUNCTURE | 28" x 1 1/2" | 266.00 |
| LEISURE RIDING | 700 x 35 | 244.00 |
| SPORT | 26" x 1 3/8" | 283.00 |
| SPORT SCHOOL MATE | 26" x 1 3/8" | 233.00 |
| RACING | 27" x 1 1/4" | 289.00 |
| RACING | 700 x 20/22/23 | 277.00 |
| MOUNTAIN | 26" x 2.125"/1.9"/1.75" | 283.00 |
| SPORT | 26" x 1 1/2" | 250.00 |
| MOUNTAIN | 24" x 2.125"/1.9"/1.75" | 264.00 |
| SPORT | 24" x 1 3/8" | 261.00 |
| SPORT | 24" x 1 1/2" | 261.00 |
| B.M.X. | 20" x 2.125"/1.9"/1.75" | 250.00 |
| B.M.X. | 16" x 2.125"/1.9"/1.75" | 211.00 |
| B.M.X. | 14" x 1 3/8" x 1 5/8" | 183.00 |
| B.M.X. | 12.5" x 1.75" x 2 1/4" | 166.00 |

### மோட்டார் சைக்கிள் ரியூப்

| மாதிரி | விலை ரூ. |
|---|---|
| 250 x 17 DSI | 266.00 |
| 275 x 14 DSI | 266.00 |
| 275 / 300 x 18 DSI | 310.00 |
| 350 x 10 DSI | 266.00 |
| 300 x 17 DSI | 310.00 |
| 350 / 400 x 8 DSI | 266.00 |
| 250 x 18 DSI | 278.00 |
| | |
| 225 / 250 x 17 MY | 264.00 |
| 225 / 250 / 275 x 16 MY | 264.00 |
| 275 / 300 x 18 MY | 307.00 |
| 350 x 10 MY | 264.00 |
| 325 x 16 MY | 302.00 |
| 400 x 8 MY | 267.00 |
| 410 x 18 MY | 423.00 |
| 450 / 500 x 12 MY | 319.00 |

சாம்சன் றபர் இண்டஸ்ரீஸ்
(பிரைவேட்) லிமிற்ரெட்
ஜினசேன மாவத்தை, மகர, கடவத்தை .
தொலைபேசி : 011-2 926065 பெக்ஸ் : 011-2 925179


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையும் பிரதேச கலாசார சபையும் இணைந்து ஏற்பாடுசெய்த தேசிய கலை இலக்கியப் பெருவிழா அண்மையில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது. பெருவிழாவின் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்ற பண்பாட்டுப் பேரணியை முதலிரு படங்களிலும் பிரதமவிருந்தினரான உலக வங்கியின் வீடமைப்புத் திட்ட யாழ்.மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம் மற்றும் விருந்தினர்கள் பேரணியில் வருகைதருவதை மூன்றாவது படத்திலும் உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன், யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் ந.பரமசிவம் ஆகியோர் உரைநிகழ்த்துவதை அடுத்துள்ள படங்களிலும் காணாலாம். *(படங்கள்: காரைநகர் செய்தியாளர்).*


## மலிவு விற்பனை

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு படப்பிடிப்பாளருக்கு தேவையான சகல விதமான CREATIVE CD, VIDEO BACKGROUND DVD மற்றும் AUDIO, VIDEO, MP3 பக்திப் பாடல்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**P.S.A.GRAPHICS**

*தியாகி திலீபன் நினைவுத் தூபி அருகில்,*
*நல்லூர்.*
T.P.: 077 7892236, 071 4068809 (39505)


## ஓராண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | மறைவு |
|---|---|
| 03 | 30 |
| 01 | 08 |
| 1946 | 2004 |

அமரர்

**கலாநிதி சிலோன் விஜயேந்திரன்** (M.A.D.Lit)

*வாழையடி வாழையென*
*வந்துலவி வென்ற*
*வாகைசூழ் 'கலைத்தமிழன்'*
*வழிமரபில் உதித்தெழுந்த*
*'வயாவிளான் சூரியனே'*
*'சிலோன் விஜயேந்திரன்' எனும்*
*சிலிர்ப்பூட்டும் படைப்பாளியே*
*'இயல், இசை, நாடகமாய்'*
*இருந்து நடை பயின்று*

*எங்கள் 'குலக்கொழுந்தாய்'*
*பெரும் புகழைச் சேர்த்தவனே*
*ஈழத்தில் முளைவிட்டு*
*இந்தியாவில் வேரூன்றி*
*ஆழத்தமிழ்க் கலையும்*
*அழகொளிரும் இலக்கியமும்*
*படைத்தளித்த 'பெருந்தமிழா'*
*இன்றுனது ஓராண்டு நிறைவில்*
*எம் இதய அஞ்சலியை ஏற்றிடுக.*

உடன் பிறப்புகள்
மைத்துனர், மைத்துனி, பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பலாலி வீதி,
உரும்பிராய். (ச-44880)(29-12-18)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 709 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 30-8-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 4706435-4722902 |

வெற்றி இலக்கங்கள்

**05 13 28 36**

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 31,65,350/-
வெல்லப்படவில்லை
இந்த வெள்ளிக்கிழமை
ரூபா. 39,68,300/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,59,587 | 10/- | 35,95,870/- |
| 2.இலக்கங்கள் | 33,097 | 20/- | 6,61,940/- |
| 1.இல லக்கினம் | 32,702 | 30/- | 9,81,060/- |
| 2.இல லக்கினம் | 3,001 | 100/- | 3,00,100/- |
| 3.இலக்கங்கள் | 889 | 500/- | 4,44,500/- |
| 3.இல லக்கினம் | 73 | 5,000/- | 3,65,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 31,65,350/- | - |
| | | மொத்தம் | 68,48,470/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 79,00,720/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 79,00,720/- தொடர் இல. 5659623 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 4714006-9-52 |
| காலி | 4718127-1-58 |
| கொழும்பு | 4718203-7-05 |
| கொழும்பு | 4718223-6-50 |
| கொழும்பு | 4714635-3[illegible] |


## வயோதிபர் மரணம்!

மோட்டார்சைக்கிளில் வந்த வயோதிபர் ஒருவர் திடீரென மயக்கமுற்று வீழ்ந்து அந்த இடத்திலேயே மரணமானார். இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுந்தரம் சுப்பிரமணியம் (வயது 80) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்.

குறிப்பிட்ட வயோதிபர் மோட்டார்சைக்கிளைச் செலுத்திச் சென்ற சமயம் திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் சிறிய விபத்தொன்றைச் சந்தித்தார் என்றும் - அதனையடுத்து, வயோதிபரிடம் அப்பகுதியில் நின்ற பொலீஸார் ஆவணப் பரிசோதனை செய்தபோது அவர் மயங்கி வீழ்ந்து பின்னர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், சடலத்தைப் பார்வையிட்டதுடன் சடலத்தை யாழ்.ஆஸ்பத்தியில் ஒப்படைக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். நேற்றிரவு யாழ்.ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற பிரேத பரிசோதனை மற்றும் மரணவிசாரணை என்பவற்றையடுத்து சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி யாழ்.மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (எ-12-ரி-86-78)

## மாநகர ஆணையாளராக சீ.வி.கே. நியமனம்

யாழ். மாநகர சபை புதிய ஆணையாளராக சீ.வி.கே. சிவஞானம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போதைய மாநகர ஆணையாளர் கலாநிதி க. குணராஜா திருகோணமலையிலுள்ள மாகாண சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து, இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. புதிய ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் தமது கடமையை பொறுப்பேற்பார் என்று தெரிவிக்கப்பட்டது. சீ.வி.கே.சிவஞானம் 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். மாநகர ஆணையாளராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-13)


## நெல்லை சில்க் அதிர்ஷ்டம்

இந்த மாதத்திற்கான பட்டுச் சேலைக்கான அதிர்ஷ்ட லாபச் சீட்டு இல.4312. உரியவர் வந்து பட்டுச் சேலையை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(C/44879) S.அகிலதாஸ்
உரிமையாளர்.

**ராஜா** யாழ்ப்பாணம்
*சியாம், அஸின், பூஜா, லைலா நடித்த*
**உள்ளம் கேட்குமே**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
நாளை முதல் சுரேஸ்கோபி
**பத்ரம்**
(அ-43380)

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின்
நகைச்சுவைச் சித்திரம்
**இங்கிலீஸ்காரன்**
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(அ-43363)

**மனோகரா** யாழ்ப்பாணம்
ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த
**தாஸ்**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.
அடுத்த வெளியீடு சிம்பு, கோபிகா நடித்த
**தொட்டி ஜெயா**
(அ-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த
**அந்நியன்**
(டொல்பி ஒலியமைப்பு)
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகாலிங்கம் நேசராணி
*(சங்கானை)*

சங்கானை கிழக்கு, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவராகிய திருமதி மகாலிங்கம் நேசராணி நேற்று (31.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கார்த்தி மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் நடராஜா -சரஸ்வதி (கிளி) தம்பதியரின் அன்பு மகளும் ஜெசிறோஸ், தாஞ்சன், நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் நேசன், நாதன், வசந்தன், சசிகரன், கமலா, ரஞ்சினி, சர்மிளா, சசி, தர்சினி, நளினி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*சங்கானை.* (C/44882)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### சுந்தரம் சுப்பிரமணியம் (டடா)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (31.08.2005) புதன்கிழமை மாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஸ்ரீபவனம்'*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.* (39517)

**தகவல்:**
**திருமதி ஸ்ரீரமணி அருள்வேல் (மகள்),**
**க.க. அருள்வேல் (மருமகன்).**

### திருமதி ஞானேஸ்வரி கணேசலிங்கம்



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி கணேசலிங்கம் அவர்கள் 30.08.2005 செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நவரத்தினம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இராசரத்தினம் -பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கணேசலிங்கம் (**Product Manager**, இளந்தென்றல் வாணிபம், கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும் பாமினி, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கைநாதன், இரத்தினேஸ்வரி, சிவனேஸ்வரி, சற்குணநாதன் (**Printing Manager Lake House**), பரமநாதன் (**J.P.**, உரிமையாளர் - நிறைஞ்சனாஸ், நாதன்ஸ் சினிமா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், நாகபூசணி, சிவானந்தன் (மகாராஜா நிறுவனம்), நவரத்தினம் (ஏல விற்பனையாளர்), விஜயகுமாரி (ஆஸ்திரேலியா), யசோதரா, கமலாதேவி, தேவஞானி, கோமளவல்லி, சபாலிங்கம் (ஜேர்மனி), சங்கரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னம்பெரி மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் பின் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிறைஞ்சனாஸ்*
*204, பொன்னாலை வீதி,*
*சங்கானை.* (C/44881)(29-18-12)

**தகவல்:**
**ந.பரமநாதன்**
**(சகோதரன் -J.P.)**

### முருகேசு சங்கரப்பிள்ளை

காரைநகர், வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சங்கரப்பிள்ளை நேற்று(31.08.2005)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தெய்வானை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வவுனியா, பூந்தோட்டத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தங்கோடை,*
*காரைநகர்.* (39511)(29-18-12)

**தகவல்:**
**க.சோமசுந்தரம்(மருமகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈராக் தலைநகர் பக்தாத்தில் வழிபாட்டுத் தலத்தில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கியும் டைகிரீஸ் நதியில் மூழ்கியும் உயிரிழந்த ஆயிரத்துக்கும் அதிகமான யாத்திரிகர்களின் பாதணிகளின் குவியலை படத்தில் காணலாம்.
(மேலும் செய்தி, படம் 11 ஆம் பக்கத்தில்)

## சுடர் ஒளி மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.

சுயாதீன ஊடகமொன்றை மௌனமாக்குவதற்கு மேற்கொள்ளப்படும் இவ்வாறான வன்முறைகளை ஏற்றுக்கொள்ளமுடியாதென்று சம்மேளனத்தின் தலைவர் கிறிஸ்டோபர் வாரென் தெரிவித்திருக்கிறார்.

ஊடகத்தின் பன்முகத்தன்மை ஜனநாயகத்தின் முதுகெலும்பென்பதால் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து முழுமையான விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின்முன் நிறுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென பத்திரிகையாளர்களுக்கான சர்வதேச சம்மேளனத்தின் தலைவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(எ-க)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னங்களின் தரிப்பிடங்கள் தொடர்பான விவரங்களையும் கிளிநொச்சி எழுச்சிப் பேரவையினர் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இந்த மாநாட்டையடுத்து ஏ-9 வீதியூடாக பயணிப்பவர்களுக்கு கிளிநொச்சிப் பகுதியில் மாற்றுப் பாதை அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வாகனங்கள் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பழைய ரயில்வே பாதையூடாகப் பயணித்து டிப்போச் சந்தியை அடையமுடியுமென கிளிநொச்சி எழுச்சிப்பேரவையினர் அறிவித்துள்ளனர்.

இன்றைய மாநாட்டையொட்டி கிளிநொச்சி நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது. எங்கும் மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அலங்கார வளைவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. (9)

## யுத்தநிறுத்தத்தை வலுப்படுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாத்தியம் - வாய்ப்பு - அடியோடு இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலில் இந்தப் பேச்சுகளை எங்கே நடத்துவது என்பதில் பெரும் இழுபறி உள்ளது.

ஆரம்பத்தில் இணக்கம் கண்டபடி அனுசரணையாளர்களான நோர்வேயின் இடத்தில் - ஒஸ்லோவில் - பேச்சுகளை நடத்த புலிகள் வற்புறுத்துகின்றனர். இல்லையேல், அவர்களது அரசியல் தலைமைப் பணிமனை அமைந்துள்ள கிளிநொச்சியில் அது நடக்க வேண்டும் என்பது புலிகளின் தலைமையின் விடாப்பிடி நிலையாகும்.

ஆனால், அதற்கு இலங்கை அரசுத் தலைமை இணங்குவதாக இல்லை. கதிர்காமர் படுகொலையால் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள அனுதாப அலை இலங்கை அரசுக்கு சாதகமாகவும், புலிகளுக்கு எதிராகவும் வீசுகின்றது. இந்நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களை மேற்குலகுக்கு விஜயம் செய்ய அனுமதிப்பது அரசுக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அரசுத் தலைமை கருதுகிறது. அத்தோடு, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்காலத்தில் அமைதிப் பேச்சுகள் வெளிநாடுகளில் நடைபெற்றதை அப்போதைய எதிரணிப் பிரமுகரான லக்ஷ்மன் கதிர்காமரே கிண்டல் செய்துவந்தார். இந்நிலையில் அவர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையைத் தணிவிற்கும் விவகாரம் குறித்து வெளிநாட்டில் போயிருந்து பேசுவது கதிர்காமருக்குச் செய்யும் அவமானம்- அபகீர்த்தி - என்றும் அரசுத் தரப்பினால் சம்பந்தப்பட்டோருக்கு வியாக்கியானம் கூறப்படுகின்றது.

அத்தோடு, புலிகளின் தலைமையகப் பிரதேசத்துக்கு தமது இராணுவ அதிகாரிகளைப் பேச்சுக்கு அனுப்புவது இழுக்கு என்றும் அரசுத் தலைமை கருதுகின்றது.

அதனால் பேச்சுகளை அரசினதும், புலிகளினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட - முகமாலை அல்லது ஓமந்தையில் உள்ள - சூனியப் பிரதேசத்தில் வைத்துக்கொள்ளலாம் என அரசுத் தரப்புப் பிரேரிக்கின்றது. ஆனால், அது தமக்குப் பாதுகாப்பானது இல்லை எனத்தெரிவித்து அதனை ஏற்கப் புலிகள் அடியோடு மறுப்புத் தெரிவித்து விட்டனர்.

இதனால், யுத்த நிறுத்தத்தை உறுதிப்படுத்துவது குறித்துப் பேச இணங்கிய இரு தரப்பையும் பேசுவதற்கான இடத்தை முடிவு செய்வதில் இணக்கம் காணவைக்கமுடியாமல் தடுமாறுகிறது நோர்வே அனுசரணைத் தரப்பு.

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தல் இவ்வருட இறுதியில் என்று இலங்கை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பும், மேற்படி உத்தேச பேச்சுகளை தள்ளிப் போடவைத்து விட்டதாகத் தெரிகிறது.

நாட்டின் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம்தான் உள்ளது. அந்தப் பதவியைத் தற்போது வகிக்கும் சந்திரிகாவின் அதிகாரம் அடுத்த இரண்டரை மாத காலத்துக்குள் - ஜனாதிபதித் தேர்தல் முடிவோடு - காலாவதியாய் போகிறது என்பது நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. எப்படியாயினும், இலங்கையின் அதிகாரத்தலைமை அடுத்து இரண்டரை மாத காலத்துக்குள் கைமாறப்போவது உறுதி என்ற பின்னணியில் -

இப்போது பேச்சுக்கான முன்முயற்சிகளை எடுத்து அதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டு, பேச்சுகளை ஒழுங்கு செய்தாலும், அவை நடைபெற்று ஒரு தீர்க்கமான - இணக்கமான - முடிவுகள் எட்டப்பட்டு அவை நடைமுறைப் படுத்தப்படுவதற்கு முன்னரே ஆட்சி அதிகாரத் தலைமை மாறிவிடவும், அதனால் ஏற்கனவே காணப்பட்ட இணக்கநிலையை நடைமுறைப்படுத்துவதில் இழுபறி ஏற்படவும் வாய்ப்புண்டு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில் மேற்படி யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுகளை உடனடியாக நடத்த தீவிர முயற்சி எடுக்காமல், அது தள்ளிப்போக இடமளிப்பது என்ற மனப்பாங்கு சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் வலுப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு புறம் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் ஏற்பாடுகள் மறுபுறம் இரண்டு வாரகாலத்தில் நோர்வேயில் பொதுத்தேர்தல்.

இரண்டு இடங்களிலுமே அதிகாரமாற்றங்கள் ஏற்பட அதிக சாத்தியங்கள் உள்ளன. எனவே, இந்தத் தேர்தல் களேபரங்கள் அடங்கு நிலையான அரசியல் தலைமைகள் உருவாகி, ஸ்திரநிலை ஏற்பட்ட பின்னரே இனிமேல் பேச்சுகள் - அவை யுத்த நிறுத்தத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் இருக்கலாம், சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்காவும் இருக்கலாம் - நடைபெறலாம் என்று அந்த வட்டாரங்கள் மேலும் விளக்கமளித்தன. (க)


NEW SCIENCE CENTRE
யாழ்நகர்
ORGANIC பிரிவு 11
ஆரம்பம்: 01/09/2005 வியாழன்
Tue., Thurs. - 12.00
* PHYSICAL CHEMISTRY
* Sta., Sun. 11 - 12
(38489)
அன்பழகன் B. Sc.

வெளிவந்துவிட்டது!
1994-2005 க.பொ.த. (உ/த)
பௌதிகவியல் வினா - விடைகளின்
அலகுரீதியான தொகுப்பு வெளி
வந்துவிட்டது.
பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்
கொள்ளலாம்.
வந்திரி வெளியீடு.
(39454)

உயர்கல்வி மாணவர்களே!
நீங்கள் அவசரமாக எழுதிய ஆய்வுக்கட்டுரைகள் அழகாக இல்லாமல் / இருக்கலாம்?. நாம் அவற்றை விரைவாக கணினி மூலம் அழகாக வடிவமைத்துத் தருகின்றோம்.
குறிப்பு :- கணினி பதிப்பு மூலம் தலைப்பிட்டு பைண்டிங் செய்தும் தரப்படும்.
ஜய்ராம் JAYRAM PRINTERS பிறின்ரேஸ்
351, மணிக்கூண்டு வீதி,வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி


## இலங்கையில் அரசுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடொன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றால் அதனைப் பயன்படுத்திப் புலிகள் தமது சுயாட்சி நகர்வை மேம்படுத்துவர் என அரசு இதற்குக் காரணம் தெரிவித்திருந்தது.

2003ஆம் ஆண்டில் அரசு-புலிகள் இடையே ஆரம்பமான பேச்சுகளைக்கூட பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையில் நடத்துவதற்குப் புலிகள் மறுப்புத் தெரிவித்து வந்துள்ளனர் என்று சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் அவர்கள் இதுபற்றி வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க அதிகாரம் அளிக்கப்படாதவர்கள். இதனால் தமது பெயர்கள் ஊடகங்களில் வெளிவருவதை அவர்கள் விரும்பவில்லை.

பேச்சுகளை எங்கு நடத்துவது என்பது தொடர்பான தமது நிலைப்பாட்டைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக அரசுக்குத் தெரியப்படுத்தி விட்டனர்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிககாரவுக்கும் நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கும் இடையே இது தொடர்பான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதனை கொழும்பிலுள்ள நோர்வே தூதரகப் பெண் பேச்சாளர், கிஷோர் ரொம்டால் அம்மையார் உறுதிப்படுத்தினார். எனினும் அதுபற்றிய விவரங்களை வெளியிடுவதை அவர் தவிர்த்துக் கொண்டார்.

இதேவேளை, கிழக்கில் அதிகரித்துவரும் படுகொலைகளால் யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலை, நாட்டை மீளவும் யுத்தத்திற்கே இட்டுச் செல்லும் என யுத்த நிறுத்த ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் எச்சரித்துள்ளனர். இதற்கு அரச படையினரும் விடுதலைப் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

"இந்தகைய வன்செயல்கள் தொடருமாயின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் படுமோசமான நிலைமைக்கு உள்ளாகும்" - என யுத்த நிறுத்தக் கண்காணிப்புத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

"இது ஒரு மோசமான நிலைமை. அதனால்தான் இரு தரப்பினரும் சந்தித்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்த வேண்டும்" -என்றார் அவர்.

யுத்த நிறுத்தம் தொடர்பான பேச்சுகள் நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறுவதையே புலிகள் விரும்புகின்றனர். ஆனால், அரசு அதில் நாட்டமற்றிருக்கிறது. நாட்டிற்குள் இரு தரப்பினரும் இடையிலான பேச்சுகளை நாட்டிற்குள் நடத்துவதற்கு புலிகள் அடியோடு நிராகரித்துவிட்டனர்.

(எ-க)

## தேர்தலில் யாருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைக் கவனத்திற்கொள்ளவில்லையெனத் தெரியவருகிறது.

பெருந்தோட்டப் பகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான ஒரு சூழ்நிலை இருப்பதால் ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சிக்கு ஆதரவை வழங்கவேண்டுமென்பதே இ.தொ.கா. உறுப்பினர்கள் பலரின் நிலைப்பாடென்று அறிய முடிகின்றது.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கும் விடயத்தில் பலகோடி ரூபாய்களில் பேரம் பேசல்களும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

## பிரதமர் - ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரைச் சந்தித்துப் பேசிய பின்னர் அது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஜே.வி.பியினர், பேச்சு திருப்தியளிப்பதாக இருந்தது என்று தெரிவித்தனர். எனினும் சில விடயங்கள் குறித்து இன்னும் பல சுற்றுப் பேச்சுகளை நடத்த வேண்டியிருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளனர்.

நேற்றைய பேச்சின்போது பிரதமருடன் அமைச்சர் மங்கள சமரவீரவும் உடனிருந்தார். ஜே.வி.பி. சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ஸ, அனுர குமார திஸநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே ஜே.வி.பியுடன் நடந்த பேச்சுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்னதாக செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-க)

## அவசரகாலச் சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் அங்கீகாரமின்றி ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு அவசரகாலச் சட்டத்தை நீடிக்க முடியும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இச்சட்டத்தைப் பயன்படுத்தி கைதுகளும், தமிழர்களுக்கெதிரான பல நடவடிக்கைகளும் இடம்பெறுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருப்பதையடுத்து ஜனாதிபதி அவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்க்கக்கூடுமென அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

## கட்டுநாயக்கா தாக்குதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாற்று ஆவணம். இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விறுவிறுப்பாக விளக்கிக் கூறுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்த கொந்தளிப்பான அரசியல் பின்னணி, அதன் ஆரம்பகால அரசியல் போராட்டங்கள், காலப் போக்கில் அதன் அபாரமான போரியல் வளர்ச்சி என்ற ரீதியில் புலிகள் அமைப்பின் புரட்சிகரமான போராட்ட வரலாற்றை உண்மைத் தகவல்களுடன் இந்நூலில் பதிவு செய்கிறார் பாலசிங்கம்.

ஒருபுறம் நீண்ட, தொடர்ச்சியான இரத்தம் சிந்தும் ஆயுதப் போராகவும் மறுபுறம் அமைதி வழியில் தீர்வுகாணவேண்டிய சமாதான முயற்சிகளாகவும் கட்டவிழ்ந்த விடுதலைப் புலிகளது போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், திருப்பங்களையும் காலவரிசையில் மிகநேர்த்தியாக இதில் எடுத்துக் கூறுகிறார் நூலாசிரியர்.

போரியல் மூலோபாயத்திலும், அரசியல் தந்திரோபாயத்திலும் புதுமைகளைப் படைத்த தமிழீழத் தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை புலிகளின் தலைமைப்பீடம் முன்நகர்த்திச் செல்லும் வியப்பூட்டும் கதையாக மதியுரைஞர் பாலாவின் அந்த நூல் விரிந்து செல்கிறது.

விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் இதுவரை வெளிவராத புதிய - சுவையான- தகவல்களைக் கொண்டதாக அமையப்பெற்ற அந்த நூலிலேயே கட்டுநாயக்கா தாக்குதல் பற்றிய உள் இரகசியங்களும் மேலோட்டமாக, சாடைமாடையாக - விவரிக்கப்பட்டிருக்கின்றன.

நீண்டகாலமாகத் திட்டமிட்டுத் திரட்டப்பட்ட புலனாய்வுத் தரவுகள், வேவுத் தகவல்களின் அடிப்படையில் மிகவும் துல்லியமாகத் தீட்டப்பட்ட பிரமிப்பூட்டும் இத்தாக்குதல் திட்டத்துடன் பல வருடப் பயிற்சி அனுபவம் பெற்ற புலனாய்வுத்துறையின் கரும்புலி அணி களம் இறங்கிய விவரத்தைத் தரும் பாலசிங்கம், புலனாய்வுத்துறையின் மூத்த உறுப்பினர் கண்ணன் தலைமையில் இத்தாக்குதல் நடத்தப்பட்ட முறையையும், அதனால் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளின் அர்த்த பரிமாணங்களையும் தமது நூலில் வெளிப்படுத்துகிறார்.

"அதிகாலை முதல் காலை ஏழு மணிவரை நடைபெற்ற கடும் மோதல்களின் பின்னர், புலிகளின் தாக்குதல் அணியிடமிருந்த ஆயுத வெடிப்பொருள்கள் தீர்ந்துபோன நிலையில், சண்டை முடிவுக்கு வந்தது. சிலர் தாக்குதலில் களப்பலியாக, வேறுசிலர் தமது வெடிகுண்டு அங்கியை வெடிக்க வைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். தாக்குதல் தளபதி கண்ணன் உட்பட மொத்தம் 14 கரும்புலி வீரர்கள் இத்தாக்குதலில் உயிர்நீத்தனர். தாக்குதல் அணியின் முக்கிய உறுப்பினரில் ஒருவரான முகிலன் களத்திலிருந்து மீண்டு தலைமையகம் சென்றடைந்தார்" - என்று விவரிக்கிறார் பாலா.

எண்ணூறு பக்கங்களைக் கொண்டு உள்ளடக்கத்திலும், அளவிலும் கனதியாக அமைந்திருக்கும் இந்நூல் லண்டனில் அச்சாகி அடுத்துவரும் தினங்களில் ஐரோப்பாவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## மரண அறிவித்தல்

### அன்னலிங்கம் தெய்வேந்திரம்

வண்ணார்பண்ணை,முருகமூர்த்தி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் தெய்வேந்திரம் அவர்கள் நேற்று (31.08.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.09.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தெ.நகுலேஸ்வரன்
(சுகந்தன்-சிவில்இஞ்சினியர் -மகன்).
முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.
(39518)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org